# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**அதி விசேஷமானது**

අංක 1994/77 - 2016 නොවැම්බර් මස 25 වැනි සිකුරාදා - 2016.11.25

*1994/77 ஆம் இலக்கம் – 2016 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 25 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

**வடக்கு மாகாண மாகாண சபை**

*2016 ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க, வடக்கு மாகாண சிறுவர் அபிவிருத்தி நிலைய நியதிச்சட்டம்*

வடக்கு மாகாண மாகாண சபையால் 2016 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 22 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்ட 2016 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க சிறுவர் அவிவிருத்தி நிலைய நியதிச்சட்டத்திற்கு வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் அவர்களால் 2016 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 21 ஆந் திகதி சம்மதம் வழங்கப்பட்டுள்ளது என்பது இத்தால் அறியத்தரப்படுகின்றது.

க. தெய்வேந்திரம்
செயலாளர்,
பேரவைச் செயலகம்,
வடக்கு மாகாண சபை.

பேரவைச் செயலகம்,
ஏ 9 வீதி,
கைதடி,
2016, நவெம்பர் 22.

## வடக்கு மாகாண சிறுவர் அபிவிருத்தி நிலைய நியதிச்சட்டம்

பிரிவுகளின் ஒழுங்குபடுத்தல்

1. சுருக்கப் பெயரும் நடைமுறைக்குவரும் தேதியும்.

### பாகம் I
### சிறுவர் அபிவிருத்தி நிலையமொன்றைப் பதிவுசெய்தல்

2. சிறுவர் அபிவிருத்தி நிலையமொன்றைப் பதிவு செய்வதற்கான தேவைப்பாடுகள்.
3. சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் முகாமையும் நிருவாகமும்.
4. பதிவுசெய்வதற்கான தகைமைகள்.
5. சிறுவர் அபிவிருத்தி நிலையம் ஒன்றைத் தாபிப்பதற்கான தற்காலிக அங்கீகாரத்திற்கான விண்ணப்பம்.
6. தற்காலிக அங்கீகாரத்தை வழங்குதல்.
7. சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் தாபிப்பானது அனுமதியளிக்கப்பட்ட காலப்பகுதியினுள் பூர்த்தி செய்யப்படுதல்.
8. சிறுவர் அபிவிருத்தி நிலையம் ஒன்றைப் பதிவு செய்தல்.
9. பதிவு செய்தலை மறுப்பதற்கான ஏதுக்கள்.
10. பதிவு செய்யப்பட்ட சிறுவர் அபிவிருத்தி நிலையம் ஒன்றிற்கு சிறுவர்களைச் சேர்த்தலும் முகாமையாளரின் கடமைகளும்.
11. பதிவுச்சான்றிதழைப் புதுப்பித்தல்.
12. பதிவு செய்யப்பட்ட சிறுவர் அபிவிருத்தி நிலையத்தினால் பேணப்பட வேண்டிய ஆகக்குறைந்த நியமங்கள்.

### பாகம் II
### பரிசோதகர்கள் மற்றும் பார்வையிடுநர்கள்

13. பரிசோதகர்களின் நியமனம்.
14. பதிவு செய்யப்பட்ட சிறுவர் அபிவிருத்தி நிலையங்களைப் பரிசோதித்தலும் மேற்பார்வை செய்தலும்.
15. பார்வையிடுநரின் நியமனம்.

### பாகம் III
### பதிவு செய்யப்பட்ட சிறுவர் அபிவிருத்தி நிலையமொன்றினை மூடிவிடுதல், பதிவுச்சான்றிதழை இடைநிறுத்துதல் அல்லது இரத்துச் செய்தல்

16. பதிவு செய்யப்பட்ட சிறுவர் அபிவிருத்தி நிறுவனமொன்றை மூடிவிடுதலில் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள்.
17. பதிவுச்சான்றிதழை இடைநிறுத்தல் அல்லது இரத்துச் செய்தல்.
18. மாகாண ஆணையாளர் பொதுவான மற்றும் விசேட பணிப்புரைகளை வழங்குதல்.
19. இரத்துச்செய்தல் கட்டளை.
20. மேன்முறையீட்டுக்கான உரிமை.
21. மேன்முறையீட்டின் மீது ஆக்கப்பட வேண்டிய கட்டளை.
22. பதிவு செய்யப்பட்ட சிறுவர் அபிவிருத்தி நிலையம் ஒன்றிலிருந்து சிறுவர்களை இடம் மாற்றுதல்.
23. பதிவுச்சான்றிதழை இரத்துச்செய்தலின் விளைவு.

### பாகம் IV
### வடக்குமாகாண சிறுவர் அபிவிருத்தி நிலையம்

24. வடமாகாண சிறுவர் அபிவிருத்தி நிலையம்.
25. வடமாகாண சிறுவர் அபிவிருத்தி நிலையமொன்றின் காப்பாளரின் கடமைகள்.

### பாகம் V
### ஏற்கும் இல்லம்

26. ஐந்து வயதிற்கு உட்பட்ட சிறுவர்களின் கவனிப்பு.
27. பிறப்புப் பதிவு.

28. பரிசோதனை அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்தல்.
29. பிள்ளையொன்றின் இடவமைவு.

## பாகம் VI
### நிதி

30. வளங்களின் கிடைப்பனவு.
31. கணக்குகளின் கணக்காய்வு.

## பாகம் VII
### தவறுகள்

32. நியதிச்சட்டத்திற்கு முரணாக சிறுவர் அபிவிருத்தி நிலையத்தினைத் தாபித்தல் அல்லது பேணுதல் தவறொன்றாதல்.
33. தகவல்களை வழங்கத் தவறுதல் ஏதேனும் பொய்யான கூற்றை ஆக்குதல் தவறொன்றாதல்.
34. மாகாண ஆணையாளர் முதலியோருக்கு முட்டுக்கட்டையிடுதல் தவறொன்றாதல்.
35. பொதுவான தண்டம்.
36. ஆட்கள் குழுவொன்றினால் புரியப்பட்ட தவறுகள்.
37. முகாமையாளர் முதலியோரினால் தவறொன்று புரியப்படுகின்றவிடத்து மேலதிக தண்டம்.

## பாகம் VIII
### ஏனையவை

38. மாகாண ஆணையாளரால் மேற்கொள்ளப்படும் நிவாரணக் கொடுப்பனவு
39. ஒழுங்குவிதிகள்.
40. மாகாண ஆணையாளருக்கு அறிக்கை சமர்ப்பித்தல்.
41. சிறுவர் அபிவிருத்தி நிலையமொன்றின் ஆண்டு நிதிக்கூற்று.
42. சிறுவர் இல்லங்களைப் பதிவு செய்தல்.
43. பொருள்கோடல்.
44. பேணல்கள்.
45. ஒவ்வாமையின் விடயத்தில் தமிழ் உரை மேலோங்கி நிற்றல்.

**சிறுவர் அபிவிருத்தி நிலையங்களைப் பதிவு செய்வதற்கும் மேற்பார்வை செய் வதற்கும் நிருவகிப்பதற்கும், அத்தகைய சிறுவர் அபிவிருத்தி நிலையங்களில் உறைவிடமளிக்கப்பட்ட சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாத்தலுக்கும், அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அதன் இடைநேர் விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு நியதிச்சட்டம். இந்நியதிச்சட்டம் (142ஆம் அத்தியாயமான) அநாதை இல்ல கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாததாகும்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வடக்கு மாகாண சபையினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக.

*சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.*

1. இந்நியதிச்சட்டமானது 2016ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க, வடக்கு மாகாண சிறுவர் அபிவிருத்தி நிலைய நியதிச்சட்டம் என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன், வடக்கு மாகாண ஆளுநர் அதற்கான தனது சம்மதத்தைத் தரக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

## பாகம் I

### சிறுவர் அபிவிருத்தி நிலையமொன்றைப் பதிவுசெய்தல்

*சிறுவர் அபிவிருத்தி நிலையம் ஒன்றைப் பதிவு செய்வதற்கான தேவைப்பாடுகள்.*

2. இந்நியதிச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதியன்றும் அதன்பின்னரும் (இதனகத்துப்பின்னர் 'சிறுவர்' எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஐந்து வயதிற்கும் பதினெட்டு வயதிற்கும் இடையிலான அநாதைகள் அல்லது கைவிடப்பட்ட சிறுவர்களுக்கான சிறுவர் அபிவிருத்தி நிலையமொன்று, இந்நியதிச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அந்நோக்கத்திற்காகப் பதிவுசெய்யப்படுவதன்மேல் தவிர வடமாகாணத்தினுள் தாபிக்கப்படுதலோ அல்லது பேணப்படுதலோ ஆகாது.

*சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் முகாமையும் நிருவாகமும்.*

3. (1) (இதனகத்துப்பின்னர் "மாகாண ஆணையாளர்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) நன்னடத்தை மற்றும் சிறுவர் கவனிப்புச் சேவைகளின் மாகாண ஆணையாளருக்கு சிறுவர் அபிவிருத்தி நிலையங்களின் வினைத்திறனான முகாமை மற்றும் நிருவகித்தலை உறுதிப்படுத்துகின்ற பொறுப்பு உரித்தாக்கப்படுதல் வேண்டும்.

(2) மாகாண ஆணையாளர் இந்நியதிச்சட்டத்தின்கீழ் அவருக்கு குறித்தளிக்கப்பட்டவாறான தத்துவங்களை, பணிகளை மற்றும் கடமைகளை பிரயோகித்தலும் புரிதலும் நிறைவேற்றுதலும் வேண்டும்.

(3) மாகாண ஆணையாளர் அவர் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கமைவாக, அவரது அத்தகைய தத்துவங்களை, பணிகளை மற்றும் கடமைகளை எவரேனும் அலுவலருக்கு கையளிக்கலாமென்பதுடன் அத்தகைய அலுவலர் கையளிக்கப்பட்டவாறாக அத்தகைய தத்துவங்களை, பணிகளை மற்றும் கடமைகளை பிரயோகிக்கலாம், புரியலாம் மற்றும் நிறைவேற்றலாம்.

(4) மாகாண ஆணையாளர் அவருக்குத் தோதானதெனக் கருதுகின்ற போதிலெல்லாம் அலுவலரொருவருக்கு கையளிக்கப்பட்ட தத்துவங்களை, பணிகளை மற்றும் கடமைகளை பிரயோகிக்கலாம், புரியலாம் மற்றும் நிறைவேற்றலாம்.

*பதிவுசெய்வதற்கான தகைமைகள்.*

4. இந்நியதிச்சட்டத்தின்கீழ் சிறுவர் அபிவிருத்தி நிலையம் ஒன்றைப் பதிவுசெய்வதற்குத் தகுதியுடையவராக இருப்பதற்குத் தேவைப்படும் தகைமைகள் பின்வருமாறு :-

(அ) விண்ணப்பதாரர், சிறுவர் அபிவிருத்தி நிலையமொன்றின் தாபிப்பையும் பேணுகையையும் அதனது அமைத்துருவாக்கலின் குறிக்கோள்களில் ஒன்றாகக் கொண்டுள்ள 1980ஆம் ஆண்டின் 31ஆம் இலக்க, வலிந்துதவு சமூக சேவை ஒழுங்கமைப்புகள் (பதிவு செய்தலும் மேற்பார்வை செய்தலும்) சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட வலிந்துதவும் ஒழுங்கமைப்பு ஒன்றாக அல்லது வடமாகாண சபையின் நியதிச்சட்டமொன்றினால் கூட்டிணைக்கப்பட்ட நிறுவனம் ஒன்றாக இருத்தல் வேண்டும்;

(ஆ) விண்ணப்பதாரர், சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் தாபிப்பிற்கும் பேணுதலுக்கும் போதிய நிதிவளத்தைக் கொண்டவராக இருத்தல் வேண்டும் ;

(இ) விண்ணப்பதாரர்-

(i) தலைவர், துணைத் தலைவர். செயலாளர், பிரதிச் செயலாளர், பொருளாளர் மற்றும் முகாமையாளர் ஆகியோர் உட்பட ஏழு உறுப்பினர்களைக் கொண்ட முன்மொழியப்பட்ட சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் நிர்வாகத்திற்காக ஆண் மற்றும் பெண் சிறுவர்களுக்கென முன்மொழியப்பட்ட தனித்தனியான முகாமைச் சபையைக் கொண்டிருத்தல் வேண்டும்;

(ii) முன்மொழியப்பட்ட முகாமைச்சபையின் தலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் முகாமையாளர் ஆகியோர் இலங்கைப் பிரசைகளாகவும் ஆகக் குறைந்தது மூன்று ஆண்டுகள் தொடர்ச்சியாக வடமாகாண எல்லையினுள் வதிபவர்களென உறுதிப்படுத்துதல் வேண்டும்;

(iii) முகாமைச்சபையின் ஆகக் குறைந்தது மூன்று உறுப்பனர்கள் விடயத்திற்கேற்ப எந்தப் பிரதேச செயலகப் பிரிவினுள் அல்லது மாவட்டத்தினுள் உத்தேசிக்கப்பட்ட சிறுவர் தாபிக்கப்படவிருக்கின்றதோ அந்தப் பிரதேச செயலகப் பிரிவில் அல்லது மாவட்டத்தில் நிரந்தரமாக வதிபவர்களென உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(ஈ) விண்ணப்பதாரர், முன்மொழியப்பட்ட சிறுவர் அபிவிருத்தி நிலையத்திற்கான அசையும் மற்றும் அசையா ஆதனங்களின் உடைமையைக் கொண்டிருத்தல் வேண்டும்;

(உ) விண்ணப்பதாரர், சிறுவர் அபிவிருத்தி நிலையம் தாபிக்கப்படவுள்ள இடம் பாதுகாப்பான சூழல் என்பதை உறுதிப்படுத்துதல் வேண்டும்;

(ஊ) சிறுவர் அபிவிருத்தி நிலையம் தாபிக்கப்படவுள்ள காணி குறித்த வலிந்துதவுகின்ற ஒழுங்கமைப்பு அல்லது கூட்டிணைக்கப்பட்ட நிறுவனத்தின் பெயரில் இருத்தல் வேண்டும் அல்லது அத்தகைய ஒழுங்கமைப்பு அல்லது கூட்டிணைக்கப்பட்ட நிறுவனத்தினால் ஆகக்குறைந்தது இருபத்தைந்து ஆண்டுக் குத்தகையில் பெறப்பட்டிருத்தல் வேண்டும்;

(எ) உறுப்பினர்கள் 9ஆம் பிரிவில் குறித்துரைக்கப்படும் ஏதேனும் மறுத்தலுக்கான ஏதுக்களுக்கு அமைந்தவராக இருத்தலாகாது; அத்துடன்

(ஏ) விண்ணப்பதாரர், இந்நியதிச்சட்டத்திற்கான I ஆம் அட்டவணையில் தரப்பட்டவாறான சிறுவர் அபிவிருத்தி நிலையம் ஒன்றினை தாபிப்பதற்காகத் தேவைப்படும் குறைந்தபட்ச நியமங்களைத் திருப்திப்படுத்துதல் வேண்டும்.

*சிறுவர் அபிவிருத்தி நிலையம் ஒன்றைத் தாபிப்பதற்கான தற்காலிக அங்கீகாரத்திற்கான விண்ணப்பம்.*

5. (1) வடக்கு மாகாணத்தினுள் சிறுவர் அபிவிருத்தி நிலையம் ஒன்றைத் தாபிப்பதற்கு விரும்புகின்ற வலிந்துதவும்ஒழுங்கமைப்பொன்று அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்று, இந்நியதிச்சட்டத்தின் 4ஆம்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தகைமைகளைத் திருப்திப்படுத்துகின்றவிடத்து, இந்நியதிச்சட்டத்தின் II ஆவது அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட படிவத்தில் அத்தகைய முன்மொழியப்பட்ட சிறுவர் அபிவிருத்தி நிலையத்தைத் தாபிப்பதற்கான தற்காலிக அங்கீகாரம் ஒன்றிற்கு விண்ணப்பிக்கலாம். இது அத்தகைய முன்மொழியப்பட்ட நிலையத்தின் முகாமையாளராகப் பணியாற்றுவதற்குக் குறித்தளிக்கப்பட்ட ஆளொருவரினால் கையொப்பமிடப்படுதல் வேண்டும்.

(2) உட்பிரிவு (1) இன் கீழ் தற்காலிக அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பமொன்றைப் பெற்றுக்கொண்டதன்மேல், மாகாண ஆணையாளர், நன்னடத்தைப் பாதுகாவல் அலுவலர் ஒருவரை அல்லது மாகாண ஆணையாளரால் தீர்மானிக்கப்பட்டவாறான போதுமான அனுபவத்தைக் கொண்டுள்ளதும் அதுசார்பில் அதிகாரமளிக்கப்பட்டதுமான வேறு எவரேனும் அலுவலரை, அவசியமாக இருக்கக்கூடியவாறான அத்தகைய விசாரணையை நடாத்தி ஆணையாளரால் குறித்துரைக்கப்படவேண்டியதான அத்தகைய காலத்தினுள் அது மீதான அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிப்பதற்கு உடனடியாகத் தேவைப்படுத்துதல் வேண்டும்.

(3) உட்பிரிவு (2) இன் கீழ் குறிப்பீடு செய்யப்பட்ட அறிக்கையானது, ஏனையவற்றுடன் தற்காலிக அங்கீகாரம் வழங்கப்படுவதற்குத் தகுதியுடையதாக வருவதற்கு 4ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தகைமைகள் யாவற்றையும் விண்ணப்பதாரர் திருப்திப்படுத்துகிறாரா என்பதைக் குறிப்பிடுதல் வேண்டும்.

தற்காலிக அங்கீகாரத்தை வழங்குதல்.

6. (1) மாகாண ஆணையாளர், 5ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவின்கீழ் அவருக்குச் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் உள்ளடக்கங்களைப் பரிசோதனை செய்வதன் மேல்.

(அ) எந்தக் குறிப்பிட்ட இடப்பரப்பில் சிறுவர் அபிவிருத்தி நிலையம் தாபிக்கப்படுவதற்கு முன்மொழியப்பட்டிருக்கின்றதோ அந்தக் குறிப்பிட்ட இடப்பரப்பில் ஏலவே பேணப்பட்டுவருகின்ற பதிவுசெய்யப்பட்ட சிறுவர் அபிவிருத்தி நிலையங்களின் எண்ணிக்கையினைக் கருத்திற்கொண்டு அத்தகைய சிறுவர் அபிவிருத்தி நிலையம் ஒன்றினைத் தாபிப்பதற்கான தேவையைத் தீர்மானித்துக்கொண்டும்.

(ஆ) முன்மொழியப்பட்ட சிறுவர் அபிவிருத்தி நிலையம் தாபிக்கப்படவுள்ள வளவுகளிற்குத் தனிப்பட்ட ரீதியாகச் செய்யப்பட்ட ஏதேனும் பார்வையிடுதலின்மீது அவர் சேகரித்திருக்கக்கூடியதான வேறு ஏதேனும் தகவலைக் கருத்திற்கொண்டும்,

சம்பந்தப்பட்ட சிறுவர் அபிவிருத்தி நிலையத்தினைத் தாபிப்பிற்கான தற்காலிக அங்கீகாரத்தை வழங்குவதா இல்லையா என்ற முடிவுக்கு வருதல் வேண்டும்.

(2) சிறுவர் அபிவிருத்தி நிலையத்தினை தாபித்தல் தொடர்பான எவையேனும் மாகாண ஆணையாளரால் தேவைப்படுத்தப்படும் தகவலை மற்றும் விபரங்களைத் கொடுத்துதவுவது விண்ணப்பதாரரின் கடமையாதல் வேண்டும்.

(3) மாகாண ஆணையாளரால் பெறப்பட்ட ஏதேனும் விண்ணப்பத்தின்மீதான முடிவொன்று, அத்தகைய விண்ணப்பம் கிடைக்கப்பெற்ற திகதியிலிருந்து மூன்று மாதங்களினுள் செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன், மாகாண ஆணையாளர்.

(அ) தற்காலிக அங்கீகாரம் வழங்குவதனை மறுப்பதற்கான முடிவொன்றிற்கு வருகின்றவிடத்து, அவர் மறுப்புக்கான காரணங்களை வழங்கி அத்தகைய நிகழ்வை எழுத்தில் விண்ணப்பதாரிக்கு அறிவித்தல் வேண்டும்.

(ஆ) தற்காலிக அங்கீகாரம் ஒன்றை வழங்குவதற்கானமுடிவொன்றுக்கு இந்நியதிச்சட்டத்திற்கான IIIஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட படிவத்தில் தற்காலிக அங்கீகாரச் சான்றிதழ் ஒன்று வழங்கப்படுதல் வேண்டும்.

(4) மூன்றாம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் வழங்கப்பட்ட தற்காலிக அங்கீகாரச் சான்றிதழொன்று, அதனது வழங்கற்தேதியிலிருந்து ஆறு மாத காலப்பகுதியொன்றுக்குச் செல்லுபடியானதாதல் வேண்டுமென்பதுடன், அமைச்சரினால் அந்நோக்கத்திற்காக விதித்துரைக்கப்படக்கூடியதான அத்தகைய நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைந்ததாதலும் வேண்டும்.

சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் அனுமதியளிக்கப்பட்ட காலப்பகுதியினுள் பூர்த்தி செய்யப்படுதல்.

7. (1) எந்த ஆளுக்கு தற்காலிக அங்கீகாரச் சான்றிதழ் 6ஆம் பிரிவின்கீழ் வழங்கப்பட்டுள்ளதோ அந்த ஆள், அத்தகைய தற்காலிக அங்கீகாரச் சான்றிதழ் செல்லுபடியாகும் காலம் காலாவதியாவதற்கு பதினான்கு நாட்களுக்கு முன்னர், அது எந்தச் சிறுவர் அபிவிருத்தி நிலையத்துடன் தொடர்புபடுகின்றதோ அந்தச் சிறுவர் அபிவிருத்தி நிலையத்தைத் தாபிப்பதற்கும், இந்நியதிச்சட்டத்தின் நோக்கத்திற்காகப் பதிவுசெய்யப்பட்ட சிறுவர் அபிவிருத்தி நிலையம் ஒன்றாக அத்தகைய சிறுவர் அபிவிருத்தி நிலையத்தைப் பதிவுசெய்வதற்கான மாகாண ஆணையாளரால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான விண்ணப்பத்துடன் சேர்த்து அதனது பூர்த்தி பற்றிய அறிக்கையொன்றைச் சமர்ப்பிப்பதற்கும் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

(2) எந்த ஆளுக்கு தற்காலிக அங்கீகாரச் சான்றிதழ் வழங்கப்பட்டிருக்கின்றதோ அந்த ஆள் (1)ஆம் உட்பிரிவின்கீழ் குறிப்பீடு செய்யப்பட்ட ஆறு மாத காலப்பகுதியினுள் சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் தாபிப்பைப் பூர்த்திசெய்வதற்கு இயலாதவராக இருக்கும்பட்சத்தில், அத்தகைய ஆள் மாகாண ஆணையாளருக்கு அதன்சார்பில் செய்யப்பட்ட எழுத்திலான வேண்டுதலின்பேரில், ஆகக்கூடியது இன்னுமொரு ஆறுமாத காலப்பகுதிவரை மேலும் காலநீடிப்பு ஒன்று வழங்கப்படலாம்.

சிறுவர் அபிவிருத்தி நிலையம் ஒன்றைப் பதிவுசெய்தல்.

8. (1) உட்பிரிவு 7 (1) இல் குறிப்பீடு செய்யப்பட்ட அறிக்கையையும் பதிவுசெய்வதற்கான விண்ணப்பத்தையும் பெற்றுக்கொண்டதிலிருந்து ஒருமாதத்தினுள் மாகாண ஆணையாளர் தானாகவோ அல்லது அதுசார்பில் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஊடாகவோ.

(அ) அத்தகைய சிறுவர் அபிவிருத்தி நிலையம் தற்காலிக அங்கீகாரச் சான்றிதழ் வழங்குதலிலிருந்து அதில் சேர்க்கப்பட்ட சிறுவர்களின் சிறந்த நலனை உறுதிப்படுத்தக்கூடியதான ஒரு முறையில் தாமாகவே பராமரிப்பதற்கான தன்மையைக் கொண்டுள்ளதா என்பதைத் தீர்மானிப்பதற்காகவும், அத்துடன்

(ஆ) அத்தகைய சிறுவர் அபிவிருத்தி நிலையம் இந்நியதிச்சட்டத்தின் நோக்கத்திற்காகப் பதிவுசெய்யப்பட்ட சிறுவர் அபிவிருத்தி நிலையம் ஒன்றாக வெளிப்படுத்தப்படுதல் வேண்டுமா எனத் தீர்மானிப்பதற்காகவும்,

அவர் அவசியமானதும் தோதானதுமெனக் கருதக்கூடியவாறான அத்தகைய விசாரணைகளையும் பரிசோதனைகளையும் மேற்கொள்ளலாம்.

(2) உட்பிரிவு (1) இன் கீழ் நிறைவேற்றப்பட்ட விசாரணை மற்றும் பரிசோதனையின் முடிவின்மீது, மாகாண ஆணையாளர்-.

(அ) பதிவுசெய்யப்பட்ட சிறுவர் அபிவிருத்தி நிலையம் ஒன்றாக அத்தகைய சிறுவர் அபிவிருத்தி நிலையத்தைப் பதிவுசெய்தல் வேண்டுமென்பதுடன் இந்நியதிச்சட்டத்திற்கான IVஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட படிவத்தில் பதிவுச்சான்றிதழ் ஒன்றையும் வழங்குதல் வேண்டும், அல்லது

(ஆ) 9 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட ஏதுக்களின்மீது பதிவுசெய்யப்பட்ட சிறுவர் அபிவிருத்தி நிலையம் ஒன்றாக அத்தகைய சிறுவர் அபிவிருத்தி நிலையத்தைப் பதிவுசெய்தலை மறுத்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய மறுப்புக்கான அவருடைய காரணங்களைக் குறிப்பிடுதலும் வேண்டும்.

(3) உட்பிரிவு (2)இன் (அ) என்னும் பந்தியின்கீழ் வழங்கப்பட்ட பதிவுச்சான்றிதழ் ஒன்று அதனது வழங்கற் தேதியிலிருந்து மூன்று ஆண்டு காலப்பகுதியொன்றுக்குச் செல்லுபடியானதாதல் வேண்டுமென்பதுடன், அமைச்சரினால் அந்நோக்கத்திற்காக காலத்திற்குக்காலம் விதித்துரைக்கப்பட வேண்டியவாறான அத்தகைய நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைந்ததாதலும் வேண்டும்.

(4) இப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் பதிவு ஒன்றை வழங்குவதற்கு மாகாண ஆணையாளர் மறுக்கின்றவிடத்து, சம்பந்தப்பட்ட ஆளிற்கு ஏலவே வழங்கப்பட்ட தற்காலிக அங்கீகாரச் சான்றிதழ், தொழிற்பாட்டிலிருந்தால் இரத்துச் செய்யப்பட்டதாக இருத்தல் வேண்டுமென்பதுடன், இந்நியதிச்சட்டத்தின் 10ஆம் பிரிவின் ஏற்பாடுகள், தற்காலிக அங்கீகாரச் சான்றிதழை வழங்கிய பின்னர் அத்தகைய சிறுவர் அபிவிருத்தி நிலையத்திற்குச் சேர்க்கப்பட்டிருக்கக்கூடிய எவரேனும் சிறுவர்கள் தொடர்பாக ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையதாதல் வேண்டும்.

பதிவு செய்தலை மறுப்பதற்கான ஏதுக்கள்.

9. உட்பிரிவு 8 (1) இன் கீழ் பதிவுசெய்யப்பட்ட சிறுவர் அபிவிருத்தி நிலையம் ஒன்றாக சிறுவர் அபிவிருத்தி நிலையம் ஒன்றைப் பதிவுசெய்வதற்கான விண்ணப்பமொன்று, பின்வரும் ஏதேனும் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட ஏதுக்களுக்காக :-

(அ) விண்ணப்பதாரர், அத்தகைய சிறுவர் அபிவிருத்தி நிலையத்தை நிர்வகிப்பதற்கும் பேணுவதற்கும் போதுமான வளங்களைப் பெற்றுக்கொண்டிருக்கவில்லையென அல்லது பெற்றுக்கொள்வதற்கு இயலாமல் இருக்கின்றாரென மாகாண ஆணையாளரால் திருப்திப்படுமிடத்து ;

(ஆ) விண்ணப்பதாரர் சிறுவர் அபிவிருத்தி நிலையத்தில் சிறுவருக்குக் கல்வி அல்லது வேறு ஏதேனும் பயிற்சி, இருப்பிட வசதிகள், பாதுகாவல், பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு என்பனவற்றை வழங்குவதற்கு அவசியமானதும் போதுமானதுமான வளங்களை வழங்குவதற்கு அல்லது பெறுவதற்குத் தவறியுள்ளார் என மாகாண ஆணையாளர் திருப்திப்படுமிடத்து ;

(இ) மாகாண ஆணையாளர், சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் முகாமையாளர் அல்லது வலிந்துதவும் தகைமையில் சிறுவர் அபிவிருத்தி நிலையத்தில் பணிபுரிகின்ற எவரேனுமாள்

அல்லது, சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் எவரேனும் அலுவலர் அல்லது வேறு ஊழியர் அல்லது சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் நிர்வாகத்துடன் இணைக்கப்பட்டுள்ள வேறு எவரேனுமாள் தவறொன்றிற்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டுள்ள ஆளொருவராக இருக்கின்றாரெனத் திருப்திப்படுகின்றவிடத்து ;

(ஈ) சிறுவர் அபிவிருத்தி நிலையத்தில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள அல்லது பணிபுரிகின்ற எவரேனுமாளின் அல்லது ஆட்களின் புகழ் அல்லது குணநலன் சிறுவர் அபிவிருத்தி நிலையத்தில் அவ்வாறு தொழிலுக்கமர்த்தப்படுவதற்கு அல்லது வலிந்துதவும் தன்மையில் பணிபுரிவதற்கு அல்லது அத்தகைய சிறுவர் அபிவிருத்தி நிலையத்தில் வதிகின்ற சிறுவர்களுடன் பணிபுரிவதில் இணைந்து செயற்படுவதற்கு அவரைச் பொருத்தமற்றவராக்குகின்ற அத்தகையவராக இருக்கின்றாரென மாகாண ஆணையாளர் திருப்திப்படுமிடத்து ;

(உ) 12ஆம் பிவிரின் கீழ் அமைச்சரினால் குறித்துரைக்கப்பட்ட பதிவுசெய்யப்பட்ட சிறுவர் அபிவிருத்தி நிலையங்களுக்கான குறைந்தபட்ச நியமங்களைப் பேணுவதற்குச் சம்பந்தப்பட்ட சிறுவர் அபிலிருத்தி நிலையத்திற்கு இயலாது இருக்கும் என மாகாண ஆணையாளர் திருப்திப்படுகின்றவிடத்து; அல்லது

(ஊ) வர்த்தமானியில் வெளியிடப்படும் அறிவித்தல் மூலம், காலத்திற்குக்காலம் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான வேறு ஏதேனும் அறிவித்தல்கள், இவ்வாறான அறிவித்தல்கள் மாகாண சபைக்கு மூன்று மாதத்திற்குள் சமர்ப்பித்தல் வேண்டும் ;

(எ) மாகாண ஆணையாளரினால் விண்ணப்பம் நிராகரிக்கப்படுமிடத்து அமைச்சருக்கு மேன்முறையீடு செய்யும் உரிமை விண்ணப்பதாரிக்கு உண்டு என்பதுடன் அதனைப பரிசீலனை செய்யவென அமைச்சரினால் நியமிக்கப்படும் மூன்று உறுப்பினர்களைக் கொண்ட பொருத்தமான குழுவின் முடிவே இறுதியானதாதல் வேண்டும்.

*பதிவுசெய்யப்பட்ட சிறுவர் அபிவிருத்தி நிலையம் ஒன்றுக்கு சிறுவர்களைச் சேர்த்தலும் முகாமையாளரின் கடமைகளும்.*

10. (1) சிறுவர் ஒருவர் பதிவுசெய்யப்பட்ட சிறுவர் அபிவிருத்தி நிலையம் ஒன்றுக்குச் சேர்க்கப்படலாகாது.

(அ) மாகாண ஆணையாளரின் முன்னங்கீகாரமின்றி, அத்துடன்

(ஆ) பதிவுசெய்யப்பட்ட சிறுவர் அபிவிருத்தி நிலையம் ஒன்றாக அத்தகைய சிறுவர் அபிவிருத்தி நிலையத்தினைப் பதிவுசெய்யும் நேரத்தில் மாகாண ஆணையாளரினால் தீர்மானிக்கப்பட்டிருக்கக்கூடியவாறான வயதெல்லை, பால் அல்லது சமயக் கோட்பாட்டினை அடிப்படையாகக்கொண்ட ஏதேனும் வகை அல்லது வேறு ஏதேனும் காரணிகள் என்பவற்றின் மீறுகையுடன்.

(2) உட்பிரிவு (1)ஆம் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், சிறுவரொருவருக்கு அபாயமேற்படுத்துகின்ற அல்லது ஏதேனும் தீங்கு விளைவிப்பதற்கான அச்சுறுத்தலை ஏற்படுத்துகின்ற அல்லது சிறுவரின் உயிருக்கு, சுகாதாரத்திற்கு அல்லது பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்துகின்ற சூழ்நிலையொன்றுக்கு அச்சிறுவர் முகங்கொடுக்க வேண்டியுள்ளதெனக் காணப்படுமிடத்து, அத்தகைய சிறுவரொருவர் மாகாண ஆணையாளரின் முன்னங்கீகாரமின்றி பதிவுசெய்யப்பட்ட சிறுவர் அபிவிருத்தி நிலையம் ஒன்றுக்குச் சேர்த்துக்கொகொள்ளப்படலாம்.

(3) சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் முகாமையாளர்,அத்தகைய சேர்த்துக்கொள்ளலிலிருந்து இருபத்து நான்கு மணத்தியாலங்களினுள் (2)ஆம் உட்பிரிவின் கீழ் சிறுவரின் சேர்த்துக்கொள்ளல் தொடர்பில் சிறுவர் நன்னடத்தைப்பாதுகாவல் அலுவலர், சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர் அல்லது தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் அலுவலருக்கு அறிவித்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய சேர்த்துக்கொள்ளலிலிருந்து இரண்டு வாரங்களினுள் மாகாண ஆணையாளரின் அங்கீகாரத்தைப் பெறுதலும் வேண்டும்.

(4) சிறுவரொருவருக்கு அபாயமேற்படுத்துகின்ற அல்லது ஏதேனும் தீங்கு விளைவிப்பதற்கான அச்சுறுத்தலை ஏற்படுத்துகின்ற அல்லது சிறுவரின் உயிருக்கு, சுகாதாரத்திற்கு அல்லது பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்துகின்ற சூழ்நிலையொன்றுக்கு அச்சிறுவர் முகங்கொடுக்குமிடத்து, சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் முகாமையாளர் இருபத்து நான்கு மணித்தியாலங்களினுள் அவசியமான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

(5) குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட சிறுவர் எவரும் அல்லது ஏதேனும் துஷ்பிரயோகத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர் எவரும் இந்நியதிச்சட்டத்தின் கீழ் தாபிக்கப்படும் சிறுவர் அபிவிருத்தி நிலையத்திற்கு அனுமதிக்கப்படுதலாகாது.

11. வழங்கப்பட்ட பதிவுச்சான்றிதழ் ஒன்று அத்தகைய சான்றிதழின் செல்லுபடியாகும் காலம் காலாவதியாகும் தேதிக்கு முன்னரான மூன்று மாதங்களினுள் அதற்காக விண்ணப்பம் செய்யப்பட்டதன்மேல், புதுப்பிக்கப்படலாமென்பதுடன், இந்நியதிச்சட்டத்தின் 4ஆம் பிரிவின் ஏற்பாடுகள் புதுப்பித்தலுக்கான அத்தகைய விண்ணப்பத்திற்கும் அது தொடர்பாகவும் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையதாதலும் வேண்டும். பதிவுச்சான்றிதழைப் புதுப்பித்தல்.

12. (1) அமைச்சர், பதிவுசெய்யப்பட்ட சிறுவர் அபிவிருத்தி நிலையம் ஒன்றினால் பேணப்படவேண்டியதான குறைந்தபட்ச நியமங்களை வத்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளை ஒன்றின் மூலம் குறித்துரைக்கலாமென்பதுடன், அவ்வாறு குறித்துரைக்கப்பட்ட எல்லா நியமங்களுடனும் கடுமையாக இணங்கியொழுகுவது பதிவுசெய்யப்பட்ட சிறுவர் அபிவிருத்தி நிலையம் ஒவ்வொன்றினதும் முகாமைச் சபையின் கடமையாதலும் வேண்டும். அத்தகைய கட்டளை வர்த்தமானியில் வெளியிடப்பட்டு மூன்று மாத காலத்தினுள் வட மாகாண சபைக்கு முன்வைக்கப்பட்டு வட மாகாண சபையினால் அங்கீகரிக்கப்படுதலும் வேண்டும். பதிவு செய்யப்பட்ட சிறுவர் அபிவிருத்தி நிலையத்தினால் பேணப்பட வேண்டிய குறைந்தபட்ச நியமங்கள்.

(2) அவசர நிலைமையின் விடயத்தில், பதிவு செய்யப்பட்ட சிறுவர் அபிவிருத்தி நிலையமொன்று மாகாண ஆணையாளரினால் குறித்துரைக்கப்படும் காலப்பகுதியொன்றுக்கென (1) ஆம் உட்பிரிவின் கீழ் வெளியிடப்படும் கட்டளையில் குறித்துரைக்கப்படும் ஆகக்குறைந்த நியமங்களுடன் இணங்கியொழுகுவதிலிருந்து விலக்களிக்கப்படலாம்.

## பாகம் II

## பரிசோதகர்கள் மற்றும் பார்வையிடுநர்கள்

13. (1) மாகாண ஆணையாளர் இந்நியதிச்சட்டத்தின் நோக்கங்களுக்காக வடமாகாணத்தினுள் பதிவுசெய்யப்பட்ட சிறுவர் அபிவிருத்தி நிலையங்களின் பரிசோதகர் ஒருவராக அல்லது பரிசோதகர்களாக எவரேனும் பகிரங்க அலுவலரை அல்லது எவரேனும் இளைப்பாறிய பகிரங்க அலுவலரை, பெயர் அல்லது பதவிமூலம் நியமித்தல் வேண்டும். பரிசோதகர்களின் நியமனம்.

(2) உட்பிரிவு (1) இன்கீழ் நியமிக்கப்பட்ட பரிசோதகர், அவருடைய கடமைகளை நிறைவேற்றுவதிலும் பணிகளைப் புரிவதிலும் மாகாண ஆணையாளரினால் வழங்கப்படக்கூடியதும் அவருடைய அதிகாரத்திற்கு அமைவாக இருக்கக்கூடியதுமான மதியுரை அல்லது அறிவுறுத்தல்கள் மீது செயலாற்றுதல் வேண்டும்.

14. (1) மாகாண ஆணையாளர் அல்லது 13ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட பரிசோதகச் பதிவுசெய்யப்பட்ட சிறுவர் அபிவிருத்தி நிலையம் ஒன்றிற்கு எந்த நேரத்திலும் நுழைந்து பர்சோதிக்கலாம் என்பதுடன், அந்நோக்கத்திற்காக சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் நிலைமை மற்றும் முகாமையினைப் பரிசோதித்தல், அதில் நிலவுகின்ற நிபந்தனைகள், எந்த முறையில் சிறுவர் பராமரிக்கப்படுகிறார்களோ அந்த முறை மற்றும் அத்தகைய சிறுவர் அபிவிருத்தி நிலையத்தில் வதிகின்ற ஒவ்வொரு சிறுவர் தொடர்பிலும் பேணப்பட்டுக்கொண்டிருக்கின்ற பதிவுகளைப் பரிசோதித்தல் உட்பட அத்தகைய சிறுவர் அபிவிருத்தி நிலையத்தில் வதிகின்ற சிறுவர்களின் சிறந்த நலனை உறுதிப்படுத்துவதற்கு அவர் அவசியமானதெனக் கருதக்கூடியவாறான ஏதேனும் கருமங்கள் பற்றி பரிசோதனை ஒன்றை நிறைவேற்றலாம். பதிவு செய்யப்பட்ட சிறுவர் அபிவிருத்தி நிலையங்களைப் பரிசோதித்தலும் மேற்பார்வை செய்தலும்.

(2) பரிசோதகர் ஒவ்வொருவரும் (1)ஆம் உட்பிரிவின் கீழான பரிசோதனையின் முடிவில் ஆணையாளருக்கு அறிக்கையொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

15. (1) அமைச்சர், ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட எவரேனும் ஆட்களைப் பெயர் மூலம் அல்லது பதவி மூலம் வடமாகாணத்தினுள் பதிவுசெய்யப்பட்ட சிறுவர் அபிவிருத்தி நிலையம் ஒவ்வொன்றின் பார்வையிடுநராக இருப்பதற்கென நியமிக்கலாம். பார்வையிடுநரின் நியமனம்.

(2) பார்வையிடுநர் ஒருவராக இருப்பதற்கென நியமிக்கப்பட்ட ஆள் ஒருவர், அவர் வருகைதருகின்றதான ஒவ்வொரு சிறுவர் அபிவிருத்தி நிலையம் தொடர்பிலும் நியதிச்சட்டத்தின் 14ஆம் பிரிவினால் பரிசோதகருக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகிக்கலாம்.

(3) பார்வையிடுநர் ஒவ்வொருவரும் (1) ஆம் பிரிவன்கீழான சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் பரிசோதனையின் முடிவில் மாகாண ஆணையாளருக்கான பிரதியுடன் அசைச்சருக்கு அறிக்கையொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

## பாகம் III

### பதிவு செய்யப்பட்ட சிறுவர் அபிவிருத்தி நிலையமொன்றினை மூடிவிடல், பதிவுச்சான்றிதழை இடைநிறுத்தல் அல்லது இரத்துச் செய்தல்

*பதிவு செய்யப்பட்ட சிறுவர் அபிவிருத்தி நிறுவனமொன்றை மூடிவிடுதலில் பின்பற்றப்பட வேண்டிய நடவடிமுறைகள்.*

16. (1) பதிவுசெய்யப்பட்ட வலிந்துதவும் ஒழுங்கமைப்பு அல்லது வடமாகாண சபையின் நியதிச்சட்டமொன்றினால் கூட்டிணைக்கப்பட்ட நிறுவனமொன்று, சிறுவர் அபிவிருத்தி நிலையமொன்றினை மூடிவிடுவதற்கான தீர்மானமொன்றை நிறைவேற்றுமிடத்து, அத்தகைய வலிந்துதவும் ஒழுங்கமைப்பு அல்லது நிறுவனம் அத்தகைய தீர்மானத்தை உடனடுத்து மாகாண ஆணையாளருக்கு அறிவித்தல் வேண்டும்.

(2) உட்பிரிவு (1) இன் கீழான தீர்மானம் ஒவ்வொன்றும் தீர்மானத் திகதியிலிருந்து ஆறு மாத காலப்பகுதியொன்று காலாவதியான பின்னரே நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(3) அத்தகைய சிறுவர் அபிவிருத்தி நிலையத்திலிருந்து அங்கு தங்கியுள்ள சிறுவர்கள் இடம் மாற்றப்படும் அத்தகைய காலம்வரை அத்தகைய சிறுவர்களுக்குப் பாதுகாவல், பாதுகாப்பு, பராமரிப்பைத் தொடர்ந்து வழங்குவது அத்தகைய சிறுவர் அபிவிருத்தி நிலையத்தினது முகாமைச்சபையின் கடமையாதல் வேண்டும்.

(4) அத்தகைய தீர்மானம் நிறைவேற்றப்பட்ட திகதியன்று, அத்தகைய சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் பெயரால் அல்லது கணக்கால் பெறப்பட்டதும் வைத்திருக்கப்பட்டதுமான எல்லா அசையும் மற்றும் அசையா ஆதனங்களும் மாகாண ஆணையாளருக்கு இழப்பிக்கப்படுதல் வேண்டும்.

*பதிவுச்சான்றிதழை இடைநிறுத்தல் அல்லது இரத்துச் செய்தல்.*

17. (1) பிரிவு (8)இன் கீழ் வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழானது -

(அ) பதிவுச் சான்றிதழ் பிழையான அல்லது தவறாக இட்டுச்செல்லுகின்ற அல்லது சரியற்ற தகவலை வழங்குவதன் மூலம் பெறப்பட்டுள்ளது எனக் கண்டுபிடிக்கப்படின்.

(ஆ) முகாமைச் சபையின் முகாமையாளர் அல்லது உறுப்பினர் இந்நியதிச்சட்டத்தின் அல்லது இந்நியதிச்சட்டத்தின் கீழ் ஆக்கப்படும் ஏதேனும் ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளை அல்லது பணிப்புரைகள் அல்லது கட்டளை மீறியிருப்பின்.

(இ) சிறுவர் அபிவிருத்தி நிலையம் சிறுவரின் பாதுகாப்பிற்கு ஆபத்தாக வருகின்றதெனில், அல்லது

(ஈ) சிறுவர் அபிவிருத்தி நிலையம் வழிகாட்டுநெறிகளை அல்லது நியமங்களை வேண்டுமென்று இணங்கியொழுகத் தவறியுள்ளதெனில்

இடைநிறுத்தல் வேண்டும் அல்லது இரத்துச் செய்யப்படுதல் வேண்டும்.

(2) வழங்கப்பட்ட பதிவுச்சான்றிதழொன்று (1) உட்பிரிவின் கீழ் விடயத்திற்கேற்ப, இடைநிறுத்தப்படுமிடத்து அல்லது இரத்துச் செய்யப்படுமிடத்து, முகாமையாளரால் தரப்பட்ட முகவரிக்கு பதிவுத்தபாலில் எழுத்திலான அறிவித்தல் மூலம் அத்தகைய இடைநிறுத்தல் அல்லது இரத்துச்செய்தல் பற்றி முகாமையாளருக்கு உடனடுத்து அறிவிப்பது மாகாண மாகாண ஆணையாளரின் கடமையாதல் வேண்டும்.

(3) பதிவுச்சான்றிதழொன்று (1) உட்பிரிவின் கீழ் இரத்துச் செய்யப்படுமிடத்து, இரத்துச்செய்யப்பட்ட திகதியில் அத்தகைய சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் பெயரால் அல்லது கணக்கால் பெறப்பட்டதும் வைத்திருக்கப்பட்டதுமான எல்லா அசையும் மற்றும் ஆசையா ஆதனங்களும் ஆணையாளருக்கு இழப்பிக்கப்படுதல் வேண்டும்.

*மாகாண ஆணையாளர் பொதுவான மற்றும் விசேட பணிப்புரைகளை வழங்குதல்.*

18. (1) மாகாண ஆணையாளர் -

(அ) எந்த முறையில் பதிவுசெய்யப்பட்ட சிறுவர் அபிவிருத்தி நிலையம் நிர்வகிக்கப்படுகின்றதோ அந்த முறை திருப்தியற்றதாக உள்ளதென,

(ஆ) அத்தகைய சிறுவர் அபிவிருத்தி நிலையத்தில் சிறுவர்களுக்குக் கிடைக்கக்கூடியதாகச் செய்யப்படும் உறைவிட வசதிகள் அங்குள்ள சிறுவர் வதிவிட சேமநலனிற்குப் போதாததாக அல்லது உசிதமற்றதாக உள்ளதென,

(இ) சிறுவர் எந்த முறையில் கவனிக்கப்படுகின்றார்களோ அந்த முறையானது அத்தகைய சிறுவர் அபிவிருத்தி நிலையத்தில் வதிகின்ற சிறுவர்களின் நல்வாழ்வு மற்றும் பாதுகாப்பு மீது எதிர்மறையான விளைவைக் கொண்டுள்ளது என,

(ஈ) இந்நியதிச்சட்டத்தின் 12 ஆம் பிரிவின்கீழ் அமைச்சரினால் குறித்துரைக்கப்பட்ட குறைந்தபட்ச நியமங்கள் பேணப்பட்டிருக்கவில்லை என, அல்லது

(உ) 8ஆம் பிரிவின் (3)ஆம் உட்பிரிவின் கீழ் விதித்துரைக்கப்பட்ட ஏதேனும் நியதிகள் மற்றும் நிபந்தனைகள் இணங்கியொழுகப்பட்டிருக்கவில்லை என

அபிப்பிராயப்படுகின்றவிடத்து, மாகாண ஆணையாளர் நிலைமையை சரிப்படுத்துவதற்கு கடைப்பிடிக்கப்படவேண்டிய வழிமுறைகள் தொடர்பாகப் பதிவுசெய்யப்பட்ட சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் முகாமைச்சபைக்குப் பொதுவான அல்லது விசேடமான பணிப்புரைகளை வழங்குவதற்கு அதிகாரம் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) உட்பிரிவு (1) இன் கீழ் எவையேனும் பணிப்புரைகளுடன் இணங்கியொழுகுவது எந்த முகாமைச் சபைக்கு வழங்கப்படுகின்றதோ அத்தகைய முகாமைச்சபையினது கடமையாதல் வேண்டும்.

(3) உட்பிரிவு (1)இன் கீழ் வழங்கப்படவேண்டிய எவையேனும் பொதுவான அல்லது விசேட பணிப்புரைகள்-

(அ) முகாமைச்சபையின் தலைவருக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும் அல்லது தோதானவிடத்து, பதிவுசெய்யப்பட்ட சிறுவர் அபிலிருத்தி நிலையம் அமைந்துள்ள இடப்பரப்பின் கிராமசேவை அலுவலர் ஊடாக முகாமைச்சபையின் தலைவருக்கு அனுப்பப்படுதல் வேண்டும், அல்லது

(ஆ) அத்தகைய சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் ஏனும்கட்டிடத்தில் துலாம்பரமான இடமொன்றில் ஒட்டப்படுதல் வேண்டும்.

(4) எந்த சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் முகாமைச்சபைக்கு எவையேனும் பொதுவான அல்லது விசேட பணிப்புரைகள் (1)ஆம் உட்பிரிவின்கீழ் வழங்கப்படுகின்றதோ அந்த முகாமைச்சபை அத்தகைய அறிவுறுத்தல்களுடன் இணங்கியொழுகத் தவறுகின்றவிடத்து, மாகாண ஆணையாளர், அம் முகாமைச்சபை இணங்கியொழுகுவதை உறுதிப்படுத்துவதற்கு நியாயாதிக்கம் கொண்டுள்ள தோகான நீதிவான் நீதிமன்றத்திற்கு விண்ணப்பமொன்றைச் செய்வதற்குத் தத்துவம் கொண்டிருத்தல் வேண்டும்.

19. (1) 18ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின்கீழ் மாகாண ஆணையாளரால் நீதிவான் நீதிமன்றத்திற்கு விண்ணப்பம் செய்யப்படுகின்றவிடத்து, முகாமைச்சபையானது மாகாண ஆணையாளரால் வழங்கப்பட்ட எவையேனும் பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் இணங்கியொழுகத் தவறியுள்ளது என அநநோக்கத்திற்காக நடாத்தப்பட்ட விசாரணையின் பின்னர் திருப்திப்படுவதன்மேல், அத்தகைய நீதிவான் முன்னர் தோன்றுவதற்கும், சம்பந்தப்பட்ட பதிவுசெய்யப்பட்ட சிறுவர் அபிவிருத்தி நிலையத்திற்கு வழங்கப்பட்ட பதிவு ஏன் அத்தகைய தவறுகை காரணமாக இரத்துச்செய்யப்படக்கூடாது என்பதற்குக் காரணத்தைக் காட்டுவதற்கும் அவர்களைத் தேவைப்படுத்துகின்ற அறிவித்தலை முகாமைச்சபையின் உறுப்பினர்களுக்கு வழங்கப்படுதல் வேண்டும். இரத்துச்செய்தல் கட்டளை.

(2) உட்பிரிவு (1)இன் கீழ் நீதிவான் ஒருவரால் வழங்கப்பட்ட அறிவித்தலொன்று கிடைக்கப்பெற்றதன்மேல், முகாமைச்சபை உறுப்பினர்கள் அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட தேதியன்று அத்தகைய நீதிவான் முன்னர் தோன்றுவதற்குத் தவறியிருந்தால் அல்லது தோன்றியிருந்து ஏன் பதிவு இரத்துச்செய்யப்பட்க்கூடாதென்பதற்கான போதுமான காரணத்தைக் காட்டுவதற்குத் தவறியிருந்தால், நீதிவான் சம்பந்தப்பட்ட பதிவுசெய்யப்பட்ட சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் பதிவை இரத்துச்செய்தல் கட்டளை ஒன்றை ஆக்குதல் வேண்டும்.

(3) பதிவுசெய்யப்பட்ட சிறுவர் அபிவிருத்தி நிலையமொன்றின் பதிவை இரத்துச் செய்கின்ற கட்டளை (2) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்படுகின்றவிடத்து, மாகாண ஆணையாளர் அல்லது பரிசோதகர் அல்லது மாகாண ஆணையாளரால் அதுசார்பில் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட எவரேனுமாள் அத்தகைய சிறுவர் அபிவிருத்தி நிலையத்திற்குள் நுழைவதற்கும் அத்துடன்-

(அ) அத்தகைய சிறுவர் அபிவிருத்தி நிலையத்தில் வதிகின்ற சிறுவர்களை வடமாகாணத்தினுள் வேறொரு பதிவுசெய்யப்பட்ட சிறுவர் அபிவிருத்தி நிலையத்திற்கு இடம்மாற்றுவதற்கும்,

(ஆ) சிறுவர்களை அவர்களுடைய பெற்றோரிடம் கையளிப்பதற்கும், அல்லது

(இ) மாகாண ஆணையாளரால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான வேறேதேனும் அமைவிடத்திற்கு சிறுவர்களை இடம்மாற்றுவதற்கும், தத்துவம் கொண்டிருத்தல் வேண்டும்.

(4) பதிவுச்சான்றிதழொன்று (2) உட்பிரிவின் கீழ் இரத்துச் செய்யப்படுமிடத்து, இரத்துச்செய்யப்பட்ட திகதியில் அத்தகைய சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் பெயரால் அல்லது கணக்கால் பெறப்பட்டதும் வைத்திருக்கப்பட்டதுமான எல்லா அசையும் மற்றும் அசையா ஆதனங்களும் மாகாண ஆணையாளருக்கு இழப்பிக்கப்படுதல் வேண்டும்.

மேன்முறையீட்டுக்கான உரிமை.

20. (1) பிரிவு (19)இன் உட்பிரிவு (2)உன் கீழ் நீதிவான் ஒருவரால் ஆக்கப்பட்ட கட்டளைபற்றி அதிருப்தியுறும் ஆளெவரும், குற்றவியல் வழக்கொன்றில் அல்லது விடயமொன்றில் நீதிவான் நீதிமன்றத்தினால் எடுத்து மொழியப்பட்ட இறுதிக் கட்டளை போன்று அதே முறையில் அரசியலமைப்பின் 154ஓ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட இயைபான மேல் நீதிமன்றத்திற்கு மேன்முறையீடொன்றைச் செய்யலாம். அத்துடன் 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் 320 இலிருந்து 330 வரையான பிரிவுகள் (இரண்டுமுட்பட) அத்துடன் 357 மற்றும் 358 ஆம் பிரிவுகள் அத்தகைய மேன்முறையீட்டுக்கு ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(2) இப்பிரிவின் கீழ் அதன் மேன்முறையீட்டு நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில், மேல் நீதிமன்றமொன்றினால் ஆக்கப்பட்ட கட்டளையொன்று பற்றி அதிருப்தியடைந்திருக்கும் ஆள் எவரும், அதற்கெதிராக மேல் நீதிமன்ற அனுமதியுடன் சட்டப்பிரச்சனையொன்றின் மீது உயர் நீதிமன்றத்துக்கு மேன்முறையீடொன்று செய்யலாம். அத்தகைய அனுமதி மறுக்கப்படுகின்றவிடத்து, உயர் நீதிமன்றத்தின் சிறப்பு அனுமதியை முதலில் பெற்றுக் கொண்டு உயர் நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு செய்யலாம்.

மேன்முறையீட்டின் மீது ஆக்கப்பட வேண்டிய கட்டளை.

21. மாகாண மேல் நீதிமன்றமானது 20ஆம் பிரிவின் (1) ஆம் பிரிவின் கீழ் அதற்கு ஆக்கப்பட்ட மேன்முறயீட்டின்மீது பின்வரும் கட்டளைகளுள் ஏதேனுமொன்றை ஆக்குவதற்குத் தத்துவம் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) நீதிவான் நீதிமன்றத்தினால் ஆக்கப்பட்ட கட்டளையை உறுதிப்படுத்துதல், நிராகரித்தல் அல்லது வேறுபடுத்தல்,

(ஆ) நீதிவானுக்கு முன்னர் காரணம் காட்டுவதற்கான அனுமதியை முகாமைச்சபைக்கு வழங்குதல், அல்லது

(இ) வழக்குச் சூழ்நிலையில் நியாயமானதெனக் கருதக்கூடியவாறான வேறேதேனும் கட்டளையை ஆக்குதல்.

பதிவு செய்யப்பட்ட சிறுவர் அபிவிருத்தி நிலையம் ஒன்றிலிருந்து சிறுவர்களை இடம் மாற்றுதல்.

22. (1) பதிவுசெய்யப்பட்ட சிறுவர் அபிவிருத்தி நிலையமொன்றின் முகாமையாளர், அத்தகைய சிறுவர் அபிவிருத்தி நிலையத்தில் வதிகின்ற சிறுவரின் வதிவிடத்தினை மாற்றீடு செய்தல் தொடர்பாக மாகாண ஆணையாளரினால் வழங்கப்பட்ட ஏதேனும் பணிப்புரைகள் அல்லது அறிவுறுத்தல்களுக்கு இணங்கியொழுகுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய சிறுவர் அபிவிருத்தி நிலையத்தில் வதிகின்ற சிறுவர் எவரும் மாகாண ஆணையாளரின் முன்னங்கீகாரமின்றி வேறேதேனும் பதிவுசெய்யப்பட்ட சிறுவர் அபிவிருத்தி நிலையத்திற்கு மாற்றப்படலாகாது அல்லது ஏதேனும் முறையில் அத்தகைய பதிவு செய்யப்பட்ட நிலையத்திலிருந்து அகற்றப்படுதலாகாது.

(2) பதிவுசெய்யப்பட்ட சிறுவர் அபிவிருத்தி நிலையமொன்றின் முகாமையாளர், அத்தகைய நிலையத்தில் வதிகின்ற சிறுவரின் வதிவிடத்தினை மாற்றீடு செய்தல் தொடர்பாக சிறுவரின் கருத்தைக் கேட்டல் வேண்டுமென்பதுடன் சிறுவரின் அதிசிறந்த நலனுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுதலும் வேண்டும்.

(3) ஒழுங்குவிதிகளால் விதித்துரைக்கப்படக்கூடியவாறாக அமைத்துருவாக்கப்படும் இடவமைவுக்குழுவானது, மூன்று ஆண்டுகளுக்கு மேலாக சிறுவர் அபிவருத்தி நிலையத்தில் சிறுவர் ஒருவரை வைத்திருப்பதற்கு முடிவெடுக்கின்றவிடத்து, அத்தகைய முடிவானது மாகாண ஆணையாளரின் முன்னங்கீகாரம் பெற்றிருந்தாலன்றி நிறைவேற்றப்படலாகாது,

23. (1) எந்தப் பதிவுசெய்யப்பட்ட சிறுவர் அபிவிருத்தி நிலையத்தன் பதிவு இரத்துச் செய்யபபட்டுள்ளதோ அந்தப் பதிவுசெயயப்பட்ட சிறுவர் அபிவிருத்தி நிலையத்திற்கு சிறுவர் எவரையும் சேர்த்துக் கொள்ளுதலாகாது. பதிவுச்சான்றிதழை இரத்துச் செய்தலின் விளைவு.

(2) விடயத்திற்கேற்ப பதிவுசெய்யப்பட்ட சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் பதிவு இரத்துச் செய்யப்படும் வேளையில் அல்லது மேன்முறையீட்டில் இரத்துச் செய்தலுக்கான கட்டளை உறுதிப்படுத்தப்பட்டவிடத்து, அப்பதிவுசெய்யப் பட்ட சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் வதிபவர்களாக உள்ள எவரேனும் சிறுவர்கள் அத்தகைய இரத்துச் செய்தல் அல்லது கட்டளையை உறுதிப்படுத்துதல் எது எவ்வாறிருப்பினும், அத்தகைய சிறுவர் அபிவிருத்தி நிலையத்திலிருந்து இடம்மாற்றப்படும் அத்தகைய காலம்வரை எவரேனும் சிறுவர்களுக்கு பாதுகாவல், பாதுகாப்பு, பராமரிப்பைத் தொடர்ந்து வழங்குவது அத்தகைய சிறுவர் அபிவருத்தி நிலையத்தினது முகாமைச்சபையின் கடமையாதல் வேண்டும்.

## பாகம் IV

### வடக்குமாகாண சிறுவர் அபிவிருத்தி நிலையம்

24. (1) அமைச்சர், இந்நியதிச்சட்டத்தின்கீழ் அதனது பதிவுச் சான்றிதழ் இடைநிறுத்தப்படுதல் அல்லது உரத்துச் செய்யப்படுதல், அல்லது தற்காலிக அங்கீகாரச் சான்றிதழ் பதிவுச்சான்றிதழாக மாற்றப்பட தவறுகை அல்லது பதிவுச்சான்றிதழ் புதுப்பித்தல் மறுக்கப்பட்டதன் காரணமாக சிறுவர் அபிவிருத்தி நிலையமொன்றிலிருந்து இடம்மாற்றப்படக்கூடியதான எவரேனும் சிறுவர்களை ஏற்றுக்கொள்வதற்கும் பாதுகாவலுக்கும் பாதுகாப்பதற்கும் மற்றும் பராமரிப்பதற்கும் மாற்றுப் பராமரிப்பு ஏற்பாடுகள் பூர்த்தியாகும் வரை வடமாகாண சபையினால் பேணப்படவேண்டிய வடக்குமாகாண சிறுவர் அபிவிருத்தி நிலையமொன்றைத் தாபிக்கலாம். வடக்குமாகாண சிறுவர் அபிவிருத்தி நிலையம்.

(2) உட்பிரிவு (1) இன் கீழ் தாபிக்கப்பட்ட வடமாகாண சிறுவர் அபிவிருத்தி நிலையமொன்றின் தாபிப்பு, நிர்வாகம் மற்றும் பேணுகையில் உறப்பட்ட எல்லாச் செலவினங்களும் வடமாகாண சபையின் மாகாண நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

(3) அமைச்சர் இப்பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட வடமாகாண சிறுவர் அபிவிருத்தி நிலையமொன்றின் காப்பாளராக இரக்கவேண்டிய ஆளொருவர் மற்றும் அத்தகைய வடமாகாண சிறுவர் அபிவிருத்தி நிலையத்தை நிர்வகப்பதற்குத் தேவைப்படக்கூடியவாறுான வேறு அலுவலர்கள் மற்றும் சேவையாளர்களின் எண்ணிக்கையை பெயர்கொண்டு அல்லது பதவிகொண்டு நியமித்தல் வேண்டும்.

(4) இப்பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட வடமாகாண சிறுவர் அபிவிருத்தி நிலையமொன்றின் முகாமையானது அதனது தவிசாளராக இருக்கவேண்டியவரான மாகாண ஆணையாளரையும் அமைச்சரினால் நியமிக்கப்படவேண்டிய வேறு மூன்று உறுப்பினர்களுக்கு மேற்படாதோரையும் கொண்டிருக்கவேண்டிய முகாமைச்சபைக்கு ஒப்படைக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வடமாகாண சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் காப்பாளராக நியமிக்கப்பட்ட ஆள் சபையின் செயலாளராதலும் வேண்டும்.

25. (1) வடமாகாண சிறுவர் அபிவிருத்தி நிலையமொன்றின் காப்பாளர் வடமாகாண சிறுவர் அபிவிருத்தி நிலையமொன்றின் முகாமைச்சபையினால் அவருக்கு வழங்கப்பட்ட எவையேனும் பணிப்புகளுக்கு இணங்கவும் மாகாண ஆணையாளரால் காலத்திற்குக் காலம் வழங்கப்படக்கூடியதான ஏதேனும் மதியுரை அல்லது அறிவுறுத்தலுக்கு இணங்கவும் அவருடை கடமைகளை நிறைவேற்றுதல் வேண்டும். வடமாகாண சிறுவர் அபிவிருத்தி நிலையமொன்றின் காப்பாளரின் கடமைகள்.

(2) காப்பாளர், வடமாகாண சிறுவர் அபிவருத்தி நலையத்திற்குச் சேர்க்கப்பட்ட சிறுவர்களுக்கான போதுமான சட்டப்படியான பாதுகாவல், பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு என்பவற்றை உறுதிப்படுத்துவதற்கு அவசியமான எல்லா நடவடிக்கைகளையும் எடுத்தல் வேண்டுமென்பதுடன், விடயத்திற்கேற்றவாறு எந்த

மாவட்டத்திலிருந்து அச்சிறுவர்கள் மாற்றப்பட்டார்களோ அம்மாவட்டத்தினுள் பதிவுசெய்யப்பட்ட சிறுவர் அபிவிருத்தி நிலையமொன்றுக்கு அத்தகைய சிறுவர்களை இயன்றவரை விரைவாக இடமாற்றுவதற்கு அல்லது அத்தகைய சிறுவர்களை அவர்களுடைய பெற்றோரிடம் திரும்ப அனுப்புவதற்கு அவசியமான எல்லா நடவடிக்கையையும் எடுத்தல் வேண்டும்.

(3) காப்பாளர் பதிவுசெய்யப்பட்ட சிறுவர் அபிவிருத்தி நிலையமொன்றிற்கு ஏதேனும் சிறுவரைக் கைமாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கின்றவிடத்து, அவர், அந்நோக்கத்திற்காக மாகாண ஆணையாளரின் முன்னங்கீகாரத்தைப் பெறுதல் வேண்டும். மாகாண ஆணையாளர் நன்னடத்தைப் பாதுகாவல் அலுவலரிடமிருந்து அறிக்கையொன்றைப் பெற்றுக்கொண்டதன் மேல் அத்தகைய அங்கீகாரத்தை வழங்கலாம்.

## பாகம் V

## ஏற்கும் இல்லம்

ஐந்து வயதிற்கு உட்பட்ட சிறுவர்களின் கவனிப்பு.

26. (1) ஐந்து வயதிற்குட்பட்ட அநாதை, கைவிடப்பட்ட சிறுவர், வடமாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் கவனிப்புச் வேவைகள் திணைக்களத்தினால் நிருவகிக்கப்படுகின்றதான ஏற்கும் இல்லம் ஒன்றில் மட்டுமே உறைவிடமளிக்கப்பட்டு இடமளிக்கப்பட்டு பாதுகாக்கப்படுதல் வேண்டும்.

(2) ஐந்து வயதிற்கு உட்பட்ட பிள்ளையொன்று அநாதையாக உள்ளார் என அல்லது கைவிடப்பட்டுள்ளாரென அறியவரும் எவரேனுமாள், விடாத்திற்கேற்ப, அத்தகைய நிகழ்வுபற்றி அருகிலுள்ள பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு, எவரேனும் பொலிஸ் அலுவலருக்கு, வடமாகாண நன்னடத்தை, சிறுவர் கவனிப்புச் சேவைகள் நிணைக்கள அலுவலருக்கு, அல்லது அப்பிரதேசத்தின் கிராமசேவை அலுவலருக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

(3) மருத்துவப் பரிசோதனையொன்றிற்கு, அண்மையிலுள்ள அரசாங்க வைத்தியசாலைக்குச் சம்பந்தப்பட சிறுவரை உடனடியாகச் சேர்த்துக்கொள்வதற்கு அவசியமான நடவடிக்கை எடுப்பது (2) ஆம் உட்பிரிவின்கீழ் தகவலைப் பெற்றுக்கொள்கின்ற எவரேனும் அலுவலரின் கடமையாதல் வேண்டும்.

(4) சிறுவரின் மருத்துவப் பரிசோதனைமீது ஏதேனும் மருத்துவ சிகிச்சைத் தேவைப்பாடு இருக்கவில்லையெனக் காணப்படுமிடத்து, வடமாகாணத்தினுள் அமைந்துள்ள ஏற்கும் நிலையமொன்றிற்கு மாகாண ஆணையாளரின் சம்மதத்துடன் சம்பந்தப்பட்ட சிறுவரைச் சேர்த்துக்கொள்வது வைத்தியசாலையின் பணிப்பாளரின் அல்லது அதுசார்பில் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலரின் கடமையாதல் வேண்டும்.

பிறப்புப் பதிவு.

27. (1) அநாதை அல்லது கைவிடப்பட்ட பிள்ளையொன்றாகவுள்ளதாகக் காணப்பட்ட அத்தகைய பிள்ளை மருத்துவமனையிலுருந்து விடுவிக்கப்படுவதற்கு முன்னர் அத்தகைய பிள்ளையின் பிறப்பைப் பதிவுசெய்வதை உறுதிப்படுத்துவதற்கு அவசியமான எல்லாப் பூர்வாங்க நடவடிக்கைகளையும் எடுப்பது மருத்துவமனைப் பணிப்பாளரினதும் அல்லது அதுசார்பில் முறையாக அதிகாரமளிக்கப்பட்டவேறு எவரேனும் அலுவலரதும் கடமையாதல் வேண்டும்.

(2) அத்தகைய பிறப்பு முறையாகப் பதிவுசெய்யப்பட்டதன் பின்னர் மாகாண ஆணையாளருக்கு உடனடியாக அறிவிப்பது மருத்துவமனையின் பணிப்பாளரின் கடமையாதல் வேண்டுமென்பதுடன், மாகாண ஆணையாளர் வடமாகாணத்தினுள் அமைந்துள்ள ஏற்கும் நிலையம் ஒன்றிற்கு அத்தகைய பிள்ளைளைச் சேர்ப்பதற்கு அவசியமான எல்லா நடவடிக்கைகளையும் எடுத்தல் வேண்டும்.

பரிசோதனை அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்தல்.

28. வடமாகாணத்திலுள்ள அமைந்துள்ள ஏற்கும் நிலையம் ஒன்றிற்குச் சேர்க்கப்பட்டிருக்கின்ற ஒவ்வொரு பிள்ளை தொடர்பிலும் ஏற்கும் நிலையத்திற்கு அத்தகைய பிள்ளையைச் சேர்த்துக்கொள்ளும் முப்பது நாட்களினுள் மாகாண ஆணையாளருக்கு அத்தகைய பிள்ளை தொடர்பான எல்லாத் தகவலையும் உள்ளடக்கிய விபரமான அறிக்கையொன்றைச் சமர்ப்பத்தல் அப்பிரிவுக்கு பொறுப்பான நன்னடத்தை அலுவலர் அல்லது மாகாண ஆணையாளரால் அதுசார்பில் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் கடமையாதல் வேண்டும்.

29. வடமாகாணத்திலுள்ள ஏற்கும் நிலையம் ஒன்றிற்குச் சேர்க்கப்பட்ட பிள்ளையொன்றின் இடவமைவுடன் தொடர்புபட்ட எல்லாக் கடமைகளையும் நிறைவேற்றுதல் மாகாண ஆணையாளரின் கடமையாதல் வேண்டுமென்பதுடன், அவர் அத்தகைய கடமையை நிறைவேற்றுவதில் தோதான இடவமைவுக்குழுவொன்றின் உதவியைப் பெற்றுக்கொள்ளலாம். *பிள்ளையொன்றின் இடவமைவு.*

## பாகம் VI

## நிதி

30. (1) மாகாண ஆணையாளர் இந்நியதிச்சட்டத்தினல் அல்லது நியதிச்சட்டத்தின்கீழ் அவருக்குப் பொறுப்புவிக்கப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காகவும்கடமைகளைப் புரிவதற்காகவும்ஏதேனும்நிதிசார் வளங்களிலிருந்து அல்லது நன்கொடைகள்மூலமாகப் பெறப்பட்ட அதனது வருடாந்த மதிப்பீடுகள் அல்லது ஏதேனும் பணம் அல்லது நிதிகளின்கீழ் அரசாங்கத்தினால் அல்லது வடமாகாண சபையினால் மாகாண நிதியத்திலிருந்து கிடைக்கக்கூடியதாகச் செய்யப்படும் ஏதேனும் நிதியத்தைப் பயன்படுத்தல் வேண்டும். *வளங்களின் கிடைப்பனவு.*

(2) மாகாண ஆணையாளர் இந்நியதிச்சட்டத்தின்கீழ் அவருடைய கடமைகளை நிறைவேற்றுவதற்காக அவருக்குக் கிடைக்கக்கூடியதாகச் செய்யப்படும் எல்லா நிதியங்களின் கணக்குகளின் முறையான புத்தகங்களைப் பேணுதல் வேண்டும்.

(3) கணக்காய்வு தொடர்பாக 1987ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க மாகாணசபைச்சட்டத்தின் 23(1), 23(2) ஆகிய பிரிவுகள் ஏற்புடையதாகும்என்பதுடன் நிதியத்தின் கணக்குகள், அரசியலமைப்பின் 154ஆம் உறுப்புரையின் நியதிகளின்படி கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் அல்லது கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் நியமிக்கப்பட்ட தகைமைபெற்றவொரு கணக்காய்வாளரினால் வருடாந்தம் தணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

31. ஒவ்வொரு பதிவுசெயயப்பட்ட சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் ஆண்டு வருமானம், செலவினம் மற்றும் கணக்குகள், தகைமைபெற்ற கணக்காய்வாளரொருவரால் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன், மாகாண ஆணையாளருக்கு ஆண்டுதோறும் சமர்ப்பிக்கப்படுதலும் வேண்டும். *கணக்குகளின் கணக்காய்வு.*

## பாகம் VII

## தவறுகள்

32. (அ) சிறுவர் அபிவிருத்தி நிலையத்திற்கான தற்காலிக அங்கீகாரச் சான்றிதழொன்றைப் பெறாமல் அத்தகைய நிலையமொன்றைத் தாபிக்கின்ற அல்லது தற்காலிக அங்கீகாரச் சான்றிதழொன்றை இரத்துச் செய்த பின்னர் சிறுவர் அபிவிருத்தி நிலையமொன்றைத் தொடர்ந்து நடத்துகின்ற, *நியதிச்சட்டத்திற்கு முரணாக சிறுவர் அபிவிருத்தி நிலையத்தினைத் தாபித்தல் அல்லது பேணுதல் தவறொன்றாதல்.*

(ஆ) இந்நியதிச்சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட சிறுவர் அபிவிருத்தி நிலையமொன்றாகப் பதிவுசெய்யப்படாமல் தற்காலிக அங்கீகாரச் சான்றிதழ் வலிதாகும் காலப்பகுதி காலாவதியான பின்னர் சிறுவர் அபிவிருத்தி நிலையமொன்றைப் பேணுகின்ற அல்லது நிர்வகிக்கின்ற,

(இ) அதனது பதிவை இரத்துச்செய்தபின்னர் பதிவுசெய்யப்பட்ட சிறுவர் அபிவிருத்தி நிலையமொன்றாகச் செயற்படுவதைத் தொடருகின்ற, எவரேனுமாள், அல்லது ஆட்கள் குழு இந்நியதிச்சட்டத்தின்கீழ் தவறொன்றிற்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறையான விளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப் பளிக்கப்பட்டதன்மேல், ஐநூறாயிரம் ரூபாவுக்கு விஞ்சாத குற்றப்பணமொன்றிற்கு அல்லது ஐந்து ஆண்டு காலப்பகுதியொன்றை விஞ்சாத இருவகையிலொருவகையன மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

தகவல்களை வழங்கத் தவறுதல் ஏதேனும் பொய்யான கூற்றை ஆக்குதல் தவறொன்றாதல்.

33. (1) இந்நியதிச்சட்டத்தின்கீழ் சமர்ப்பிக்கப்படுவதற்குத் தேவைப்படுத்தப்படும் ஏதேனும் தகவல் அல்லது பதிவேட்டைச் சமர்ப்பிப்பதற்குத் தவறுகின்ற அல்லது மறுக்கின்ற எவரேனுமாள் இந்நியதிச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதவானொருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல்–

(அ) அத்தகைய தவறு முதலாவது தடவையாகப் புரியப்படுகின்றவிடத்து, இருபத்தையாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு; அல்லது

(ஆ) அத்தகைய தவறு இரண்டாவது தடவையாக அல்லது அதற்குப் பின்னர் புரியப்படுகின்றவிடத்து, ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது இரண்டு ஆண்டு காலப்பகுதியொன்றை விஞ்சாத இருவகையிலொருவகையான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும், ஆளாதல் வேண்டும்.

(2) பொய்யான கூற்றை அறிந்துகொண்டே சமர்ப்பிக்கின்ற அல்லது இந்நியதிச்சட்டத்தின்கீழ் செய்யப்பட்ட ஏதேனும் பதிவேட்டில் அல்லது விண்ணப்பத்தில் ஏதேனும் பொய்யான அல்லது செம்மையற்ற கூற்றை அறிந்துகொண்டே ஆக்குகின்ற எவரேனுமாள் இந்நியதிச்சட்டத்தின்கீழ் தவறொன்றிற்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன்,

(அ) அத்தகைய தவறு முதலாவது தடவையாகப் புரியப்படுகின்றவிடத்து, இருபத்தையாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு; அல்லது

(ஆ) அத்தகைய தவறு இரண்டாவது தடவையாக அல்லது அதற்குப் பின்னர் புரியப்படுகின்றவிடத்து, ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது இரண்டு ஆண்டு காலப்பகுதியொன்றை விஞ்சாத இருவகையிலொருவகையான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும், ஆளாதல் வேண்டும்.

மாகாண ஆணையாளர் முதலியோருக்கு முட்டுக்கட்டையிடுதல் தவறொன்றாதல்.

34. இந்நியதிசட்டத்தினால் அல்லது இந்நியதிசட்டத்தின்கீழ் மாகாண ஆணையாளர், நன்னடத்தைப் பாதுகாவல் அலுவலர், பரிசோதகர், பார்வையிடுநர், அல்லது மாகாண ஆணையாளரினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர் மீது விதிக்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகிப்பதில், கடமைகளை நிறைவேற்றுவதில் அல்லது பணிகளைப் புரிவதில் மாகாண ஆணையாளர், நன்னடத்தைப் பாதுகாவல் அலுவலர், பரிசோதகர், பார்வையிடுநர், அல்லது மாகாண ஆணையாளரினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர் என்போரை எதிர்க்கின்ற அல்லது முட்டுக்கட்டையிடுகின்ற எவரேனுமாள் இந்நியதிசட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்கவிளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல், இருபத்தையாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றிற்கு அல்லது இரண்டு ஆண்டு காலப்பகுதியொன்றை விஞ்சாத இருவகையிலொருவகையான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

பொதுவான தண்டம்.

35. இந்நியதிசட்டத்தின் ஏற்பாடுகள் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதிகள், பணிப்புரைகள் மற்றும் கட்டளைகள் என்பவற்றிற்கு முரணாகச் செயலாற்றுகின்ற எவரேனுமாள் இந்நியதிச்சட்டத்தின்கீழான தவறொன்றிற்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவான் முன்னரான சுருக்கமுறையான விளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் பத்தாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஆறு மாத காலப்பகுதியொன்றை விஞ்சாத இருவகையிலொருவகையான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

ஆட்கள் குழுவொன்றினால் புரியப்பட்ட தவறுகள்.

36. இந்நியதிசட்டத்தின்கீழான தவறொன்று ஆட்கள் குழுவொன்றினால் புரியப்படுகின்றவிடத்து, அவ்வாட்கள் குழு–

(அ) விடயத்திற்கேற்ப சிறுவர் அபிவிருத்தி நிலையம் அல்லது ஒரு பதிவுசெய்யப்பட்ட சிறுவர் அபிவிருத்தி நிலையம் ஒன்றை நிருவகிக்கின்றதான முகாமைச்சபையாக, அத்தகைய முகாமைச்சபையின் ஒவ்வொரு உறுப்பினராக,

(ஆ) ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவாக, ஒவ்வொரு பணிப்பாளராக, முகாமையாளராக, செயலாளராக அல்லது அக்கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அலுவலராக, அல்லது

(இ) ஒரு குழுமமாக, அக்குழுமத்தின் ஒவ்வொரு பங்காளராக மற்றும் ஒவ்வொரு முகாமையாளராக,

இருப்பின், தவறான அவருடைய சம்மதத்துடன் அல்லது ஒருப்பாட்டுடன் அன்றி புரியப்பட்டது எனவும் அவர் அத்தகைய தவறினைப் புரிவதைத் தடுப்பதற்குரிய எல்லா விழிப்புக்கவனத்தையும் பிரயோகித்துள்ளார் எனவும் அவர் எண்பித்தாலொழிய, தவறினைப் புரிந்தமைகாகத் தனியாகவும் கூட்டாகவும் ஆளாதல் வேண்டும்.

*முகாமையாளர் முதலியோரினால் தவறொன்று புரியப்படுகின்றவிடத்து மேலதிக தண்டம்.*

37. இந்நியதிச்சட்டத்தின்கீழான தவறொன்று முகாமையாளரால், பதிவுசெய்யப்பட்ட சிறுவர் அபிவிருத்தி நிலையமொன்றின் முகாமைச்சபையின் உறுப்பினர் ஒருவரால் அல்லது அத்தகைய ஒரு சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் பணியாட்தொகுதியின் எவரேனும் உறுப்பினரால் புரியப்படுகின்றவிடத்து, நீதிவான் எவரேனும் உறுப்பினரால் புரியப்படுகின்றவிடத்து, நீதிவான் அத்தவறுக்காகக் குறித்துரைக்கப்பட்ட தண்டம் சுமத்துகைக்கு மேலதிகமாக அத்தகைய சிறுவர் அபிவிருத்தி நிலையத்திற்கு வழங்கப்பட்ட பதிவை இரத்துச் செய்தலுக்கான கட்டளையை விடுப்பதற்கான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

## பாகம் VIII

### ஏனையவை

*மாகாண ஆணையாளரால் மேற்கொள்ளப்படும் நிவாரணக் கொடுப்பனவு.*

38. மாகாண ஆணையாளர், பதிவுசெய்யப்பட்ட சிறுவர் அபிவிருத்தி நிலையம் ஒன்றின் முகாமையாளர் அதுசார்பில் செய்யப்பட்ட விண்ணப்பத்தின்மீது, அத்தகைய சிறுவர் அபிவிருத்தி நிலையத்திலுள்ள ஒவ்வொரு சிறுவர் தொடர்பிலும் அமைச்சரினால் தீர்மானிக்கப்படும் நன்கொடையொன்றைச் சிறுவர் ஒவ்வொருவரினதும் நன்மைக்காகப் பயன்படுத்தவேண்டிய நிவாரணம் பேணுகை நன்கொடையாக செலுத்துதல் வேண்டும்.

*ஒழுங்குவிதிகள்.*

39. (1) அமைச்சரானவர், இந்நியதிச்சட்டத்தின் ஏற்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்திற்காக அல்லது பயன்கொடுக்கும் நோக்கத்திற்காக ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) உட்பிரிவு (1) இனால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றி பின்வரும் எல்லாவற்றிற்காக அல்லது ஏதேனும் கருமங்களுக்காக ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(அ) எந்தக் கருமம் தொடர்பில் இந்நிதிச்சட்டத்தின்கீழ் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்படுகின்றதோ அல்லது அதிகாரமளிக்கப்படுகின்றதோ அந்தக் கருமம் ;

(ஆ) இந்நியதிச்சட்டத்தின்கீழ் சமர்ப்பிக்கப்படுவதற்குத் தேவைப்படுத்தும் ஏதேனும் அறிக்கையில் உள்ளடக்கப்படவேண்டிய தகவல் ;

(இ) மாகாண ஆணையாளரினால் வைத்திருக்கப்பட்டுப் பேணப்படவேண்டிய புத்தகங்களும் இடாப்புக்களும் மற்றும் அதனில் பதிவுசெய்யப்படவேண்டிய விபரங்களும் ;

(ஈ) பதிவுசெய்யப்பட்ட சிறுவர் அபிவிருத்தி நிலையங்களின் பரிசோதனைக்கான நடவடிக்கைமுறை ;

(உ) எந்தச் சூழ்நிலைகளில் சிறுவர், பதிவுசெய்யப்பட்ட சிறுவர் அபிவிருத்தி நிலையமென்றிற்குச் சேர்க்கப்படக்கூடுமோ அல்லது அதிலிருந்து விடுவிக்கப்படக்கூடுமோ அந்தச் சூழ்நிலை; அத்துடன்

(ஊ) இந்நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்குப் பயன்கொடுப்பதற்கு அவசியமாக வரக்கூடியதான வேறேதேனும் விடயங்கள்.

(3) அமைச்சரினால் ஆக்கப்படும் எல்லா ஒழுங்குவிதிகளும் வர்த்தமானியில் வெளியிடப்படவேண்டுமென்பதுன் அத்தகைய வர்த்தமானி வெளியிடுதலிருந்து மூன்று மாத காலத்தினுள் வடமாகாணசபைக்கு முன்னர் இடப்பட்டு அத்தகைய வ டமாகாணசபையினால் அங்கீகரிக்கப்படுதலும் வேண்டும்.

(4) வடமாகாணசபையினால் அங்கீகரிக்கப்படாத ஒவ்வொரு ஒழுங்குவிதியும் அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து ஆனால் அதன்கீழ், முன்னரே செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) ஏதேனும் ஒழுங்குவிதி எத்தேதியன்று இரத்துச்செய்யப்பட்டதாக கருதப்பட வேண்டுமோ அத்தேதி பற்றிய அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

மாகாண ஆணையாளருக்கு அறிக்கை சமர்ப்பித்தல்.

40. (1) இந்நியதிச்சட்டத்திற்கான Vஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட படிவத்தில் ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை தகவல் அறிக்கையை மாகாண ஆணையாளருக்கு சமர்ப்பித்தல் பதிவுசெய்யப்பட்ட சிறுவர் அபிவிருத்தி நிலையம் ஒன்றின் முகாமையாளரின் கடமையாதல் வேண்டும்.

(2) உட்பிரிவு (1) இன் ஏற்பாடுகள் எது எவ்வாறிருப்பினும், மாகாண ஆணையாளர் அல்லது மாகாண ஆணையாளரால் அதுசார்பில் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர் அத்தகைய சிறுவர் அபிவிருத்தி நிலையம் சார்பில் வழங்கப்பட்ட அறிவித்தல் ஒன்றின்மூலம் பதிவுசெய்யப்பட்ட சிறுவர் அபிவிருத்தி நிலையம் ஒன்றின் முகாமையாளரை அத்தகைய சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் நிர்வாகம் தொடர்பாக குறிப்பிட்ட ஏதேனும் கருமங்கள் பற்றி அறிக்கையொன்றைச் சமர்ப்பிப்பதற்கு அல்லது அத்தகைய சிறுவர் அபிவிருத்தி நிலையத்திலுள்ள சிறுவர் வதிவிடத்தின் பாரிய நலனை உறுதிப்படுத்துவதற்கு தேவைப்படுத்தப்டும் அவசியமாகக் கருதப்படும் ஏதேனும் தகவலை வழங்குவதற்கு தத்துவம் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், விடயத்திற்கேற்ப வழங்கப்பட்ட அறிவித்தலில் விதித்துரைக்கப்பட்ட காலத்தினுள் அறிக்கை சமர்ப்பித்தல் அல்லது தகவலை வழங்குதல் அத்தகைய முகாமையாளரின் கடமையாதலும் வேண்டும்.

சிறுவர் அபிவிருத்தி நிலையமொன்றின் ஆண்டு நிதிக்கூற்று.

41. (1) ஒவ்வொரு பதிவுசெய்யப்பட்ட சிறுவர் அபிவிருத்தி நிலையம் தொடர்பிலான ஆண்டு நிதிக்கூற்று வலிந்துதவும் ஒழுங்கமைப்பின் அல்லது கூட்டிணைக்கப்பட்ட நிறுவனத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் அந்நோக்கத்திற்காக நியமிக்கப்பட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட கணக்காய்வாளரொருவரால் தயாரிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அவ்வாறு தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் வலிந்துதவும் ஒழுங்கமைப்பின் அல்லது கூட்டிணைக்கப்பட்ட நிறுவனத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படுதலும் வேண்டும்.

(2) உட்பிரிவு (1) இன் கீழ் தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் ஒவ்வொரு ஆண்டின் ஏப்பிறல் 30ஆந் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் சம்பந்தப்பட்ட பதிவுசெய்யப்பட்ட சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் முகாமையாளரால் மாகாண ஆணையாளருக்கு அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்.

சிறுவர் இல்லங்களைப் பதிவு செய்தல்.

42. வடக்கு மாகாணத்தினுள் தாபிக்கப்பட்டிருக்கின்ற ஏதேனும் சிறுவர் இல்லம் வடமாகாண சமூகசேவை திணைக்களத்துடன் பதிவுசெய்யப்பட்டுள்ளது என்ற நிகழ்வு எதுஎவ்வாறிருப்பினும், அத்தகைய சிறுவர் இல்லம் இந்நியதிச்சட்டத்தின் கருத்தெல்லைக்குள் "சிறுவர் அபிவிருத்தி நிலையம்" ஒன்றாக இருப்பின், அத்தகைய சிறுவர் இல்லம் இந்நியதிச்சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்படுதல் வேண்டும்.

பொருள்கோடல்.

43. இந்நியதிச்சட்டத்தினால் சந்தர்ப்பம் வேறு வகையில் தேவைப்படுத்தினாலன்றி-

"சிறுவர் அபிவிருத்தி நிலையம்" என்பது, அநாதைகள், கைவிடப்பட்ட சிறுவர்களின் உறைவிட வசதிகள் மற்றும் பாதுகாப்பு என்பவற்றை ஏற்பாடு செய்கின்றதும் அவற்றுக்கான பாதுகாவலைப் பொறுப்பேற்கின்றதுமான வலிந்துதவும் நிதியிலிருந்து முழுமையாக அல்லது பகுதியளவில் பேணப்படுகின்ற சிறுவர் அபிவிருத்தி நிலையம் ஒன்று எனப் பொருள்படும்.

"கைவிடப்பட்ட" என்பது, சட்டமுறைப்படி பிறந்த சிறுவருக்கு ஏற்புடையதாக்கப்படும்போது இரண்டு பெற்றோராலும்கைவிடப்பட்ட சிறுவர் ஒருவர் அல்லது ஒரு பெற்றோரால்கைவிடப்பட்டு மற்றவர் இறந்திருக்கின்றமை அல்லது பெற்றோராக செயலாற்ற இயலாதிருக்கின்றமை அல்லது அச்சிறுவனுடைய இரண்டு பெற்றோரும் பெற்றோராகச் செயலாற்றுவதற்கு இயலாதிருக்கின்றமை அல்லது சட்டமுறையற்றுப் பிறந்திருக்கின்ற சிறுவர் ஒருவருக்கு ஏற்புடையதாக்கப்படும் போது அவருடைய தாயினால் கைவிடப்பட்ட சிறுவர் ஒருவர் அல்லது அச்சிறுவரின் தாய் பெற்றோர் ஒருவராக செயலாற்ற இயலாதிருக்கின்றமை எனப் பொருள்படும்,

"பரிசோதகர்" என்பது, 13ஆம் பிரிவின்கீழ் மாகாண ஆணையாளரினால் நியமிக்கப்பட்ட சிறுவர் அபிவிருத்தி நிலையங்களின் பரிசோதகர் எனப் பொருள்படும்,

"முகாமையாளர்" என்பது, பதிவுசெய்யப்பட்ட சிறுவர் அபிவிருத்தி நலையம் ஒன்றின் முகாமைக்குப் பொறுப்பான ஆள் எனப் பொருள்படுமென்பதுடன், தாபிக்கபட்டிராத சிறுவர் அபிவிருத்தி நிலையம் ஒன்றின் விடயத்தில் அதனது தாபிப்பின் பின்னர் முகாமையாளராக நியமிக்கப்படுவதற்கு முன்மொழியப்பட்ட ஆள் எனப் பொருள்படும்,

"அமைச்சர்" என்பது, வடமாகாணத்தின் நன்னடத்தை மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் எனப் பொருள்படும்,

"அநாதை" என்பது, சட்டமுறைப்படி பிறந்த சிறுவருக்கு ஏற்புடையதாக்கப்படும்போது அவருடைய பெற்றோர் இருவரும் இறந்திருத்தல் அல்லது அவருடைய பெற்றோரில் ஒருவர் இறந்திருந்து மற்றவர் பெற்றோர் ஒருவராக செயலாற்ற இயலாதிருக்கின்றமை அல்லது சட்டமுறையற்றுப் பிறந்த பிள்ளையொன்றுக்கு ஏற்புடையதாக்கப்படும் போது அவருடைய தாய் இறந்திருக்கின்றமை எனப் பொருள்படும்,

"நன்னடத்தை பாதுகாவல் அலுவலர்" என்பது, (24ஆம் அத்தியாயமான) தவறாளர்களின் நன்னடத்தைக் கட்டளைச்சட்டத்தின் 17ஆம் பிரிவின்கீழ், நன்டைத்தை பாதுகாவல் அறுவலராக நியமிக்கப்பட்ட அலுவலர் ஒருவர் எனப் பொருள்படும்,

"வடமாகாண சிறுவர் அபிவிருத்தி நிலையம்" என்பது, இந்நியதிச்சட்டத்தின் 24ஆம் பிரிவின்கீழ் அமைச்சரினால் தாபிக்கப்பட்ட வடமாகாண சிறுவர் அபிவிருத்தி நிலையம் ஒன்று எனப் பொருள்படும்,

"ஏற்கும் இல்லம்" என்பது, இந்நியதிச்சட்டத்தின் 26ஆம் பிரிவின்கீழ் நன்னடத்தை மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகளின் வடமாகாணத் திணைக்களத்தினால் நிர்வகிக்கப்படவிருக்கின்ற ஏற்கும் நிலையம் எனப் பொருள்படும்,

"பதிவுசெய்யப்பட்ட சிறுவர் அபிவிருத்தி நிலையம்" என்பது, இந்நியதிச்சட்டத்தின் 8ஆம் பிரிவின்கீழ் பதிவுசெய்யப்படுகின்ற சிறுவர் அபிவிருத்தி நிலையம் எனப் பொருள்படும், அத்துடன்

"காப்பாளர்" என்பது, மாகாண சிறுவர் அபிவிருத்தி நிலையம் ஒன்றிற்குப் பொறுப்பாக இருப்பதற்கென இந்நியதிச்சட்டத்தின் 25ஆம் பிரிவின் (3)ஆம் உட்பிரிவின்கீழ் அமைச்சரினால் நியமிக்கப்படும் ஆள் எனப் பொருள்படும்.

44. (1) (142ஆம் அத்தியாயமான) அநாதை நிலையக் கட்டளைச்சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளதும் இந்நியதிச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதியன்று செயற்படுத்தப்பட்டு பேணப்படவிருக்கின்றதுமான ஏதேனும் அநாதை நிலையம், இந்நியதிச்சட்டத்தின் 2ஆம் பிரிவில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகள் எது எவ்வாறிருப்பினும், ஆனால் இப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, இந்நியதிச்சட்டம் நடைமுறைக்குவரும் அத்தகைய தேதியிலிருந்தான ஆறு மாத காலப்பகுதியொன்றுக்குத் தொடர்ந்தும் செயற்படுத்தப்பட்டு பேணப்படலாம்.

(2) உட்பிரிவு (1) இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆறு மாத காலப்பகுதி காலாவதியாக முன்னர், அவ்வுட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட அநாதை நிலையம் ஒன்று பதிவுசெய்யப்பட்ட சிறுவர் அபிவிருத்தி நிலையமொன்றாக அத்தகைய அநாதை நிலையத்தின் பதிவுக்கென இந்நியதிச்சட்டத்தின் 8ஆம் பிரிவின்கீழ் விண்ணப்பமொன்றைச் செய்தல் வேண்டும்.

(3) உட்பிரிவு (2)இன் கீழ் பதிவிற்கென விண்ணப்பம் செய்யப்படுகின்றவிடத்து, மாகாண ஆணையாளர் ஆறுமாத காலப்பகுதியொன்றுக்குச் செல்லுபடியானதாக இருக்கவேண்டியதான இந்நியதிச்சட்டத்தின் VIஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட படிவத்தில் தற்காலிக பதிவுச்சான்றிதழ் ஒன்றை வழங்குதல் வேண்டுமென்பதுடன், மாகாண ஆணையாளர் அத்தகைய காலப்பகுதி காலாவதியாக முன்னரும் இந்நியதிச்சட்டத்தின்கீழ் சிறுவர் அபிவிருத்தி நிலையமொன்றாக அத்தகைய தோதான சிறுவர் அபிவிருத்தி நிலையத்தைப் பதிவுசெய்வதற்கு முடிபை மேற்கொண்டபின்னரும் 4ஆம் மற்றும் 8ஆம் பிரிவுகளில் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுவதற்குத் தேவைப்படுத்துதல் வேண்டும்.

ஒவ்வாமையின் விடயத்தில் தமிழ் உரை மேலோங்கி நிற்றல்.

45. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் தமிழ் உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

## அட்டவணை I

[பிரிவு 4(ஏ)]

### சிறுவர் அபிவிருத்தி நிலையம் ஒன்றினைப் பதிவுசெயவதற்கான ஆகக்குறைந்த நியமங்கள்

1. சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் முகாமைச்சபை உறுப்பினர்கள் பொலிஸ் அறிக்கையைச் சமர்ப்பிப்பதுடன் மூன்று பகிரங்க அலுவலர்களிடமிருந்து குணநலக் குறிப்புகளையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

2. சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் முகாமைச்சபை உறுப்பினர்கள் மற்றும் பணியாட்டொகுதி உறுப்பினர்கள் வடமாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் கவனிப்புச் சேவைகள் திணைக்களத்திடமிருந்து சிறுவருடன் வேலை செய்வதற்கான அங்கீகாரத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

3. பெண் சிறுவர் அபிவிருத்தி நலையத்தின் முகாமைச்சபையின் உறுப்பினர்களில் பெரும்பான்மையானோர் பெண்களாக இருப்பதுடன் அச்சிறுவர் அபிவிருத்தி நிலையத்திற்கும் பெண் கவனிப்பாளர்களை நியமித்தலும் வேண்டும்.

4. பணியாட்டொகுதியினர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டார்களோ இல்லையோ, வயதுவந்தவர்கள் அல்லது சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான குற்றவழக்கில் குற்றஞ் சாட்டப்பட்டிருத்தலாகாது.

5. (i) சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் முகாமைச்சபையின் உறுப்பினர்கள் மற்றும் பணியாட்டொகுதி உறுப்பினர்கள் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில ஆகக்குறைந்தது 2 பாடங்கள் சித்தியடைந்திருப்பதுடன் சிறுவர் அபிவிருத்தி மற்றும் சிறுவர் உளவியல் தொடர்பான துறையில் பயிற்சிநெறியைப் பூர்த்தி செய்திருத்தலும் ஆகக் குறைந்தது 5 ஆண்டுகள் சிறுவர் கவனிப்பு தொடர்பில் அனுபவத்தையும் கொண்ட 30-60 வயதிற்கும் இடைப்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

(ii) கவனிப்பாளர்கள் கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சையில் கணிதம் மற்றும் தமிழ் உட்பட ஆகக் குறைந்தது 6 பாடங்கள் சித்தியடைந்திருப்பதுடன், ஆகக் குறைந்தது 2 ஆண்டுகள் சிறுவர் கவனிப்பு தொடர்பில் அனுபவத்தையும் கொண்ட 25-60 வயதிற்கும் இடைப்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்,

(iii) தன்னார்வத் தொண்டர்கள் கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சையில் கணிதம் மற்றும் தமிழ் உட்பட ஆகக் குறைந்தது 6 பாடங்கள் சித்தியடைந்திருப்பதுடன் ஆகக் குறைந்தது 1 மாதம் சிறுவர் கவனிப்பு தொடர்பில் அனுபவத்தையும் கொண்ட 18-60 வயதிற்கும் இடைப்பட்டவர்களாகவும் இருத்தல் வேண்டும்,

6. சிறுவர் ஒவ்வொருவரும் தமது மதம், வயது, பால், உளவியல் அந்தஸ்து என்பவற்றைக் கருத்தில் கொண்டு தங்க வைக்கப்படுதல் வேண்டும்.

7. விசேட தேவையுள்ள சிறுவர்களுக்கு விசேட கவனிப்பு வழங்கப்படுதல் வேண்டும்.

8. (1) சிறுவர் அபிவிருத்தி நிலையம் பின்வருவனவற்றுள் ஒரு குழுவினருக்கு மட்டுமே சேவைகளை வழங்குதல் வேண்டும்.

(i) வயது 6 தொடக்கம் 10 வயது வரை
(ii) வயது 11 தொடக்கம் 18 வயது வரை

(2) வகை (i) இல் உள்ள சிறுவர்கள் பால் வேறுபாடின்றி தங்க வைக்கப்படலாமெனபதுடன் வகை (ii) இல் உள்ள சிறுவர்கள் பால் அடிப்படையில் தனித்தனியாக தங்க வைக்கப்படுதல் வேண்டும்.

9. முதலுதவிப் பெட்டியானது சிறுவர் தங்க வைக்கப்பட்டுள்ள எல்லாக் கட்டடங்களிலும் வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

10. நூலகமொன்று பேணப்படுதல் வேண்டுமென்பதுடன் சிறுவரின் வயதிற்கு ஏற்ற புத்தகங்கள் பேணப்படுதலும் வேண்டும்.

11. சிறுவரிடையே பொழுதுபோக்கு வசதிகளை மேம்படுத்த தொலைக்காட்சி, வானொலி, வாத்தியக் கருவிகள், விளையாட்டிற்கு தேவையான பொருட்கள் மற்றும் கலை தொடர்பான பொருட்கள் என்பன கிடைக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும்.

12. உடல் அல்லது உள ரீதியாக இயலாமையைக் கொண்டுள்ள சிறுவர்களுக்கு முறையான வசதிகள் ஏற்பாடு செய்தல் வேண்டும்.

13. சிறுவர் அபிவிருத்தி நிலையமானது கட்டிடத்தினுள் சிறுவர்களின் பெற்றோர், உறவினர்கள், நண்பர்களைச் சந்திப்பதற்கான வசதிகளை ஏற்பாடு செய்தல் வேண்டும்.

*14. சிறுவர், அபிவிருத்தி நிலையக் கட்டடத்தினுள் ஒவ்வொரு பாகத்தினுள்ளும் நல்ல நிலையிலுள்ள தீயணைப்புக் கருவி இருத்தல் வேண்டும்.*

*15. சிறுவர் அபிவிருத்தி நிலையத்தில் ஆறு வயதிற்கு குறைந்த 5 சிறுவருக்கு ஒரு பணியாட்டொகுதி உறுப்பினரும் 6 வயதிற்கு மேற்பட்ட 25 சிறுவர்களுக்கு 3 பணியாட்டொகுதி உறுப்பினர்களும் இருத்தல் வேண்டும்.*

*16. சிறுவர் சிறுவர் அபிவிருத்தி நிலையத்தை விட்டுவிலகும் போது தொழிலிலமர்த்துவதற்கு வசதியாக தோதான கல்வி மற்றும் தொழிற்பயிற்சி வழங்க ஏற்பாடு செய்தல் வேண்டும்.*

*17. ஒவ்வொரு சிறுவரும் மருத்துவ அலுவலருடன் பதிவு செய்ய ஏற்பாடு செய்யப்படுதல் வேண்டும்.*

*18. சிறுவர் அபிவிருத்தி நிலையம் கல்வி நிறுவனத்திற்கு அண்மையில் இருத்தல் வேண்டும்.*

*19. சிறுவர் அபிவிருத்தி நிலையக் கட்டடம் சிறுவர்களுக்கேற்ப வடிவமைக்கப்படுதல் வேண்டும்.*

*20. சிறுவர் அபிவிருத்தி நிலையக் கட்டடமானது குளியலறை, மலசலகூடம், இருக்கையறை, கற்கையறை, வெளியிட விளையாட்டிடம், தோட்டம், சாப்பாட்டறை மற்றும் சமையலறை என்பவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும். அவை ஊனமுற்ற சிறுவர்களினால் அணுகக்கூடியதாக செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.*

*21. ஒவ்வொரு சிறுவருக்கும் 36 சதுர அடியிலான இடப்பரப்பு ஒதுக்கப்படுதல் வேண்டும். தனியான படுக்கை ஒதுக்கப்படுவதுடன் நுளம்பு வலையும் வழங்கப்படுதல் வேண்டும். தனிப்பட்ட அலுமாரி வழங்கப்படுதல் வேண்டும். அறைக்குப் போதுமான வெளிச்ச மற்றும் காற்றோட்ட வசதி இருத்தல் வேண்டும்.*

*22. 8 சிறுவருக்கு ஒரு குளியலறை மற்றும் கழிவறை என்ற விகிதத்தில் இருத்தல் வேண்டும். அவை சிறுவரின் அறையுடன் இணைந்ததாக இருத்தல் வேண்டும்.*

*23. தண்ணீர்த் தாங்கிகள் நீர் விநியோகத்தை தடையின்றி வழங்குவதற்கு சிறுவர் அபிவிருத்தி நிலையத்தில் இருத்தல் வேண்டும்.*

*24. குளியலறை மற்றும் கழிவறை என்பன ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனித்தனியாக இருத்தல் வேண்டும்.*

*25. போதுமான கதிரைகளும் மேசைகளும் சிறுவர் அபிவிருத்தி நிலையத்தில் கல்வியைத் தொடர்வதற்கு இருத்தல் வேண்டும்.*

*26. கல்வி கற்பதற்கான இடப்பரப்பு பொதுவான இடப்பரப்பிலிருந்து தனி வேறானதாக இருத்தல் வேண்டும்.*

*27. போதுமான சாப்பாட்டுக் கோப்பைகள், கின்னங்கள் மற்றும் கரண்டிகள் இருத்தல் வேண்டும்.*

*28. சிறுவர் அபிவிருத்தி நிலைய வளவுகளைச் சுற்றி உயர்ந்த சுற்றிவரவுள்ள மதில் காணப்படுதல் வேண்டுமென்பதுடன் காவலாளியொருவர் 24 மணித்தியாலங்களும் இருத்தல் வேண்டும்.*

*29. சிறுவர்களின் போக்குவரத்திற்கென சிறுவர் அபிவிருத்தி நிலையத்தில் போதுமான வாகன வசதி இருத்தல் வேண்டும்.*

*30. மின்சாரம் இல்லாத போது போதிய டோர்ச் மற்றும் அதையொத்த வெளிச்சமூட்டும் வசதிகள் இருத்தல் வேண்டும்.*

*31. முறைப்பாட்டுப் பெட்டி வைக்கப்பட்டிருப்பதுடன் சிறுவர் பெயரிடாது முறைப்பாடுகளைச் செய்ய ஏற்பாடு செய்தல் வேண்டும்.*

## அட்டவணை II

[பிரிவு 6(1)]

### தற்காலிக அங்கிகாரத்திற்கான விண்ணப்பம்

1. அங்கீகாரத்தினை நாடுகின்ற வலிந்துதவும் ஒழுங்கமைப்பின் பெயர் :...........

2. வலிந்துதவும் ஒழுங்கமைப்பொன்றாகப் பதிவுசெய்யப்படுவதன்மேல் வழங்கப்பட்ட பதிவு இலக்கம் :.......

3. சிறுவர் அபிவிருத்தி நிலையத்திற்குச் சேர்க்கப்படுவதற்கு உத்தேசிக்கப்படுகின்ற சிறுவர்களின் பால், ஆகக்கூடிய மற்றும் ஆகக்குறைந்த வயது :........

4. முன்மொழியப்பட்ட சிறுவர் அபிவிருத்தி நிலையத்தினைப் பேணுவதற்காகக் கிடைக்கக்கூடிய நிதியிடல் வளங்கள்:.......

5. முன்மொழியப்பட்ட சிறுவர் அபிவிருத்தி நிலையம் ஒன்றினைத் தாபிப்பதற்கான செலவிற்காகக் கிடைக்கக்கூடிய நிதியத்தின் மொத்தத் தொகை :.........

6. முன்மொழியப்பட்ட சிறுவர் அபிவிருத்தி நிலையம் ஒன்றின் முகாமைச்சபை உறுப்பினர்களின் பெயர்களும் முகவரிகளும் :......

7. இந்தியதிச்சட்டத்தின் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டதாகத் தேவைப்படும் ஆகக்குறைந்த நியமங்களை விண்ணப்பதாரி திருப்திப்படுத்தியுள்ளாரா ? ..........

முன்மொழியப்பட்ட சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் பேணுகைக்காக நிறுவப்படவேண்டிய கட்டிடத்தின் அல்லது கட்டிடங்களின் வரைபடமொன்றையும் எந்த ஆதனத்தில் முன்மொழியப்பட்ட சிறுவர் அபிவிருத்தி நிலையம் தாபிக்கப்பட்டவிருக்கின்றதோ அந்த ஆதனத்தின் உறுதியினையும் இத்துடன் இணைக்கவும்.

.................................................................
முன்மொழியப்பட்ட சிறுவர் அபிவிருத்தி
நிலையத்தின் முகாமைச் சபையின்
முகாமையாளரின் கையொப்பம்

திகதி : ..........................

**அட்டவணை III**

[பிரிவு 6(3) (ஆ)]

**தற்காலிக அங்கீகாரச் சான்றிதழ்**

வடமாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் கவனிப்புச் சேவை மாகாண ஆணையாளர் ............................................. ஆகிய நான், 2016ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க ................................... வடமாகாண சிறுவர் அபிவிருத்தி நிலைய நியதிச்சட்டத்தின் 6(3)(ஆ) என்னும் பிரிவின்கீழ் ....................................... இல் .................................... என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான சிறுவர் அபிவிருத்தி நிலையத்தினைத் தாபிப்பதற்கான இந்த தற்காலிக அங்கீகாரச் சான்றிதழை வழங்குகின்றேன்.

20.......... ஆம் ஆண்டு........................... மாதம் .............................நாளாகிய இன்று
வழங்கப்பட்டது.

......................................
வடமாகாண நன்னடத்தை மற்றும்
சிறுவர் கவனிப்புச் வேவைகள் மாகாண
ஆணையாளரின் கையொப்பம்

திகதி : ...........................

**அட்டவணை IV**

[பிரிவு 8(2) (அ)]

**பதிவுச் சான்றிதழ்**

வடமாகாண நன்டைத்தை மற்றும் சிறுவர் கவனிப்புச் வேவைகளின் மாகாண ஆணையாளர் ................................... ஆகிய நான், வடமாகாணத்தில் தாபிக்கப்பட்டு ................................. என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான சிறுவர் அபிவிருத்தி நிலையம் 2016ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வடமாகாண சிறுவர் அபிவிருத்தி நிலைய நியதிச்சட்டத்தின் 8(2)(அ) என்னும் பிரிவன்கீழ், பதிவுசெய்யப்பட்ட சிறுவர் அபிவிருத்தி நிலையமென்றாக என்னால் பதிவுசெய்யப்பட்டது என இத்தால் சான்றுபடுத்துகின்றேன்.

20.......... ஆம் ஆண்டு ..............ஆம் மாதம் ............ ஆந் திகதி வழங்கப்பட்டது.

......................................
வடமாகாண நன்னடத்தை மற்றும்
சிறுவர் கவனிப்புச் வேவைகள் மாகாண
ஆணையாளரின் கையொப்பம்

திகதி : ..........................

## அட்டவணை V

[பிரிவு 40(1)]

### பிரிவு 40(1) இன்கீழ் தகவல் அறிக்கை

பதிவுசெய்யப்பட்ட சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் பெயரும் அமைவிடம். ..........

இந்தத் தேதியில் உள்ளவாறான சிறுவர் அபிவிருத்தி நிலையங்களில் சேர்க்கப்பட்ட சிறுவர்களின் இலக்கம், வயது மற்றும் பால்.........

இத்தேதிக்கு உடன்முற்போந்த மூன்று மாத காலப்பகுதியின்போது சிறுவர் அபிவிருத்தி நிலையங்களில் சிறுவர்களிடையே கடுமையான சுகயீனமுள்ள நோயாளர்களின் எண்ணிக்கை மற்றும் ஒவ்வொரு நோயாளர்களிலுள்ள நோயின் தன்மையும்..........

சிறுவர் அபிவிருத்தி நிலையங்களில் சிறுவர்களின் சாதாரண உணவின் தன்மையும் தரமும் அத்துடன் அத்தகைய ஒவ்வொரு சிறுவருக்கு நாளொன்றுக்கு வழங்கப்பட்ட உணவுகளின் எண்ணிக்கை.........

இத்தேதிக்கு உடன்முற்போந்த மூன்று மாதங்கள் காலப்பகுதியின்போது சிறுவர் அபிவிருத்தி நிலையங்களை விட்டு விலகிச்சென்ற சிறுவர்களின் எண்ணிக்கையும் (எவையேனும் இருப்பின்) அவர்கள் விட்டுவிலகிச்சென்றமைக்கான காரணமும்.........

......................................
பதிவுசெய்யப்பட்ட சிறுவர் அபிவிருத்தி
நிலையத்தின் முகாமைச்சபையின்
முகாமையாளரினது கையொப்பம்

திகதி : ............................

## அட்டவணை VI

[பிரிவு 41(3) ]

### தற்காலிக பதிவுச் சான்றிதழ்

வடமாகாண நன்டைத்தை மற்றும் சிறுவர் கவனிப்புச் சேவைகளின் மாகாண ஆணையாளர் .................................... ஆகிய நான், 2016ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வடமாகாண சிறுவர் அபிவிருத்தி நிலைய நியதிச்சட்டத்தின் 41(3) ஆம் பிரிவின்கீழான தற்காலிக பதிவுச் சான்றிதழானது (142ஆம் அத்தியாயமான) அநாதை நிலையங்கள் கட்டளைச்சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்டதும் ............................ என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான அநாதை நிலையத்துக்கு இத்தால் வழங்குகின்றேன். இது 20......ஆம் ஆண்டு...........மாதம் ..............ஆந் நாளிலிருந்து ஆறு மாத காலப்பகுதியொன்றுக்குச் செல்லுபடியாதல் வேண்டும்.

......................................
வடமாகாண நன்னடத்தை மற்றும்
சிறுவர் கவனிப்புச் வேவைகள் மாகாண
ஆணையாளரின் கையொப்பம்
(இலச்சினை)

திகதி : .........................

12-509

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.